விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 05 செவ்வாய்க்கிழமை (21.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 276

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இறுதி யுத்தத்தில் சிறிய பகுதிக்குள்

# 'மக்கள் பட்ட அவலங்களை புரிந்து கொண்டுள்ளோம்!'

### புதுமாத்தளன் சென்ற ஆணைக்குழு அதிகாரி விபரிப்பு

(முல்லைத்தீவு)

**இறுதிப்போர் நடைபெற்ற மிகக்குறுகிய பிரதேசத்திற்குள் இலட்சக்கணக்கான மக்கள் அடைபட்டு கிடந்த அவலத்தை, அப்பகுதியை நேரில் சென்று பார்வையிட்டபோது தெரியவந்ததாக படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஜனாதிபதி ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் கவலையுடன் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழு நேற்று முல்லைத்தீவு மாவட்ட மக்களின் சாட்சியங்களை பதிவு செய்வதற்காக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கூடியது. இதனையடுத்து இக் குழு அரச படைகளுக்கும் (18ஆம் பக்கம் பார்க்க)

## அனைவரையும் சாட்சியமளிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை

### முல்லைத்தீவு மக்கள் குற்றச்சாட்டு

(முல்லைத்தீவு)

படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என முல்லை மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த 18, 19ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் தனது சாட்சிகளைப் பதிவு செய்து கொண்டது.

நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் (18ஆம் பக்கம் பார்க்க)



முல்லைத்தீவில் சாட்சிகளை செவிமடுக்கும் நல்லிணக்க ஆணைக்குழு...

### உள்ளே

☸ தேசிய கல்வி நிறுவக ஆசிரிய பயிற்சிநெறி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் விபரம்...

## ஊடகங்கள் அஞ்சுகின்றன; ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு!

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராக யுத்த நீதிமன்றம் விதித்துள்ள தீர்ப்பு தொடர்பில் கருத்துக்களை வெளியிட ஊடகங்கள் அஞ்சுவதாக எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்ப்புத் தொடர்பில் கருத்துக்களை வெளியிட சகலரும் அஞ்சுவதாகவும் தாம் இந்த விடயம் குறித்து சபாநாயகரிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன் (18ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் முக்கிய உறுப்பினரான தமிழினிக்கு இருவார விளக்கமறியல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மகளிர் அரசியல் பிரிவுப் பொறுப்பாளராக இருந்த தமிழினியை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

தமிழினி வவுனியா முகாமில் தாய் மற்றும் சகோதரி ஒருவருடன் தங்கியிருந்த வேளை விசேட பொலிஸ் அணி ஒன்றினால் கடந்த வருடம் மே மாதம் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பாதுகாப்பு (18ஆம் பக்கம் பார்க்க)

# விசாரணைக்கென கொண்டு செல்லப்பட்ட உறவுகளும் காணாமல் போயுள்ளனர்!

(முல்லைத்தீவு)

வன்னியில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தின் போது இடம் பெயர்ந்து இராணுவக்கட்டுப்பாட்டுபகுதிக்குச் சென்றபோது விசாரணைக்கென இராணுவம் மற்றும் கடற்படையினரால் அழைத்துச்செல்லப்பட்ட இளைஞர், யுவதிகளும் காணாமல் போயுள்ளதாக படிப்பிணைகள் மற்றும் நல்லிணக்க ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் சாட்சியமளிக்கப்பட்டுள்ளது.

### முல்லைத்தீவில் சாட்சியமளிப்பு

போர் உக்கிரமாக இடம்பெற்ற வன்னிப் பிரதேசத்தில் படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நேற்று அங்குள்ள மக்களிடம் சாட்சியங்களை பதிவு செய்தது. இறுதி மோதல்கள் நடைபெற்ற முள்ளி வாய்க்கால், வெள்ள (18ஆம் பக்கம் பார்க்க)

www.cse.lk

புதிய முதலீட்டு வாய்ப்பு புதிப்பிக்கப்பட்ட நம்பிக்கை

யாழ் மக்களுக்கான ....

"பங்குச்சந்தை முதலீடுகள் தொடர்பான கருத்தரங்கு"

இடம் : பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபம், யாழ்ப்பாணம்

காலம் : 2010 புரட்டாதி 22 ம் திகதி புதன்கிழமை

நேரம் : காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரை


அனுமதி இலவசம்

பங்குச்சந்தை பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மேலதிக தகவல்களுக்கு :
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணக்கிளை
396/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1455 / 021 5672444

CSE
COLOMBO STOCK EXCHANGE

(2509)



முல்லைத்தீவில் நேற்று நடைபெற்ற படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணையின் போது, காணாமல் போனோரின் தகவல்கள் அடங்கிய படிவங்களை வழங்குவதற்கு காத்திருக்கும் உறவுகளை அக் குழுவின் தலைவர் ஆர்.டி.ஏ.சில்வா உன்னிப்பாக அவதானிப்பதையும் படிவங்களைக் கையளிப்பதற்காக காத்திருக்கும் உறவுகளையும் படங்களில் காணலாம்.

# வடக்கில் உள்ள 90 பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய கல்வி அமைச்சு அனுமதி

(கொழும்பு)

நாடு பூராகவும் ஆயிரம் பாடசாலைகளை முழுமையாக அபிவிருத்தி செய்தல் திட்டத்தில் வடக்கு மாகாணத்தில் 90 பாடசாலைகளைத் தெரிவு செய்ய கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

எனினும் வடக்கு மாகாணத்தில் இத் திட்டத்தின் கீழ் 100 பாடசாலைகளைத் தெரிவு செய்ய அனுமதி வழங்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் கேட்டுள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் கல்வி அமைச்சில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனா தலைமையில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாணம் சார்பில் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் பங்கேற்றதுடன் ஏனைய மாகாணங்களிலிருந்து முதலமைச்சர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடல் தொடர்பில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தகவல் தருகையில்,

நாடு பூராகவும் ஆயிரம் பாடசாலைகளை முழுமையாக அபிவிருத்தி செய்தல் என்ற திட்டத்தை அமுல்படுத்துவதற்கான கலந்துரையாடல் கல்வி அமைச்சில் கல்வி அமைச்சரின் தலைமையில் நடைபெற்றது.

இத் திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் தெரிவாகும் ஆயிரம் பாடசாலைகள் ஒவ்வொன்றினதும் அபிவிருத்திக்குத் தலா 60 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்படும்.

இதன் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் 90 பாடசாலைகளை இத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்வதற்கு அனுமதி வழங்குவதாக கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் வடக்கு மாகாணத்தில் இடைநிறுத்தப்பட்ட பாடசாலைகள் பல மீள ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இத் திட்டத்தில் 100 பாடசாலைகளைத் தெரிவு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரிடம் கேட்டுள்ளார்.

இத் திட்டத்தின் கீழ் பாடசாலைகள் தெரிவு செய்யப்படும்போது பூகோள அடிப்படை உட்பட சில காரணிகள் கவனத்தில் கொள்ளப்படும் என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (எ-5)

# மின்சாரம் தாக்கி இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் உள்ள களஞ்சியசாலை ஒன்றில் மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி ஆலய முன்வீதியில் யாழ்.நகர மாபிள் கடைஒன்றில் களஞ்சியசாலை ஒன்று உள்ளது. அக் களஞ்சியசாலையில் ஹற்றனைச் சேர்ந்த 26 வயதுடைய போல்ராஜ் என்பவர் களஞ்சியப் பொறுப்பாளராகப் பணிபுரிந்து வந்தார்.

மேற்படி களஞ்சியசாலையின் வாயிலில் மின்குமிழ் பொருத்த முற்பட்ட வேளை அதனூடாக வந்த மின்சாரம் தாக்கியதில் அவ்விளைஞன் உயிரிழந்தார்.

சம்பவம் இடம்பெற்ற வேளை அவ்விடத்தில் யாரும் இல்லாமையால் மேற்படி இளைஞன் பரிதாபமாக உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு வந்த யாழ்ப்பாணம் பொலிஸார் சடலத்தை யாழ்ப்பாண வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (எ-5)

# நிறைகுறைந்த பாணை விற்பனை செய்யும் வெதுப்பகங்களுக்கு எதிராக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நிறை குறைவான பாண்களை விற்பனை செய்யும் வெதுப்பக உரிமையாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

யாழ்.மாவட்டத்திலுள்ள பல வெதுப்பகங்களில் பாண் நிறை தொடர்பாக நிறுவைகள், அளவைகள் பரிசோதகரால் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நிறை குறைவான பாண்களை விற்பனை செய்த வெதுப்பக உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் ஏற்கெனவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் வெதுப்பக உரிமையாளர்களுக்கு எதிராகத் தொடர்ந்தும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (ச-5)

## வெலிக்கந்தை புனர்வாழ்வு நிலையத்திலுள்ள

# புலிகளின் முன்னாள் போராளிகளை பிள்ளையான் சென்று பார்வையிட்டார்

(மட்டக்களப்பு)

வெலிக்கந்தை புனர்வாழ்வு முகாமில் இருந்து வரும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களைக் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் நேரில் சென்று சந்தித்து உரையாடியுள்ளார்.

தவிர தொழிற்பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்பிற்கான உபகரணங்களையும் முதல்வர் அவர்களுக்கு வழங்கியுள்ளார்.

ஏற்கெனவே சில மாதங்களுக்கு முன்பு இந்த முகாமிற்கு சென்றிருந்த வேளை புனர்வாழ்வு பெற்று வரும் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களினால் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே இந்த உபகரணங்களை அவர்களுக்குத் தாம் வழங்கியதாக தெரிவித்தார்.

புனர்வாழ்வு பெற்று வருபவர்களைப் பொறுத்தவரை தங்களுடைய குடும்பங்களைப் பிரிந்திருப்பது தொடர்பான கவலை அவர்களிடம் காணப்பட்டாலும் ஏனைய விடயங்களில் அவர்கள் திருப்தியுடன் காணப்படுவதாக முதலமைச்சர் கூறினார்.

திருமணம் புரிந்தவர்கள் விரைவில் குடும்பங்களுடன் இணையவிருப்பது பற்றியும் ஏனையோர் படிப்படியாக விடுவிக்கப்படவிருப்பது பற்றியும் அவர்கள் தன்னிடம் தெரிவித்தனர்.

அண்மையில் மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் சம்பந்தப்பட்டவர்களின் கவனமின்மையால் ஏற்பட்ட விபத்து என்றே தான் கருதுவதாகவும் அவர் கூறினார். (எ-5)

# கோடிக் கணக்கில் மோசடி; இருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பிரித்தானியாவில் தொழில்வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி கோடிக் கணக்கில் மோசடி செய்த நபர்களைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கண்டி அனிவத்தப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட குறித்த நபர்கள் தந்தையும் மகனும் என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

பிரித்தானியாவில் வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதாகத் தெரிவித்து இளைஞர், யுவதிகளிடமிருந்து 15 முதல் 18 இலட்சம் ரூபா பணம் அறவீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

40ற்கும் மேற்பட்டவர்களிடமிருந்து இவ்வாறு பணம் திரட்டப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# நவோத்யா வார நிகழ்வு

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க் கிழமை 5-வது நாளாக நவோத்யா வார நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

இன்றைய நிகழ்வில் சுகாதாரத்துறை சார்ந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. வித்தியாலய ஆசிரியர் மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்ப்பாணப் பாடசாலை வைத்தியர் டாக்டர் வை.யோகேஸ்வரன் கலந்துகருத்துரை வழங்கவுள்ளார். (ஸ்ரீ)


## தேவை

ஸ்ரூடியோ ஒன்றிற்கு பெண் காசாளர் தேவை. தகைமை O/L, A/L. யாழ். மாநகர சபைக்கு உட்பட்டோர் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 0779234540

(251)

## தவறிவிட்டது

சித்தன்கேணிச்சந்தி, சித்தன்கேணியைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் பகீரதன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (84155383[illegible]), விசேட அடையாள அட்டை என்பன 19.09.2010 அன்று வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பஸ் வண்டியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புக்கு:- 0770757308, 0217912711

## பெயர் மாற்ற அறிவித்தல்

இல.656, செல்வாநகர், கிளிநொச்சியைச்சேர்ந்த தயாபரன் லக்சுமிதேவி ஆகிய நான், எனது பிள்ளைகளான றோகினி, கயானி ஆகிய இருவருக்கும் பிறப்புப் பதிவுப் புத்தகத்தில் 13ஆம் கட்டத்தில் முறையே கலையரசி, கயல்விழி என பெயர் மாற்றம் செய்தோம். எனினும் இவர்கள் இருவரும் இனிவரும் சகல ஆவணங்களிலும் அவர்களது முன்னைய பெயர்களையே பயன்படுத்துவார்கள் என்பதனை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

இப்படிக்கு,
உண்மையுள்ள,
த. லக்சுமிதேவி.

(2478)

## வாடகைக்கு

அச்சுவேலி பஸ் நிலையம் அருகாமையில் மேல் வீட்டுடன் 23 அடி அகலம் 100 அடி நீளம் கொண்ட கடை கட்டடம் வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு:- 0213007021

(2239)




## வீடு விற்பனைக்கு

நெல்லியடி சந்தியிலிருந்து 100m தூரத்தில் (சயன்ஸ் சென்ரர் முன்னால்) வீடு உட்பட அயன் சேவ், செற்றி விற்பனைக் குண்டு

தொடர்புக்கு:- 0779008431, 0776648751

(2512)

# இன்று ஒரு தகவல்

## வாலாட்டாதே

ஒருத்தர் நம்முடைய வீட்டுக்கு வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அவர் வந்தவுடன் சொல்கிறார்.

"சேர், நான் உங்களுடைய வீட்டு வாசலில் நுழையும் போதே உங்கள் வீட்டு நாய் என்னைப் பார்த்து வாலை ஆட்டியது" என்கிறார்.

இதற்கு என்ன அர்த்தம்?

இவர் நல்ல மனதுடன் இதை நிம்மிடம் தெரிவிக் கிறார் என்று அர்த்தம்.

அவரே இன்னொன்றையும் சொல்கிறார்.

"சேர், நான் உங்களுடைய வீட்டு வாசலில் நுழையும் போது உங்களுடைய கடைக்குட்டிப் பையன் என்னைப் பார்த்து வாலாட்டினான் சேர்" என்கிறார்.

இதற்கு என்ன அர்த்தம்?

அவர் எரிச்சலுடன் இதை நம்மிடம் சொல்கிறார் என்று அர்த்தம்.

நாய் வாலாட்டினால் ஒரு அர்த்தம். மனிதன் வாலை ஆட்டினால் வேறொரு அர்த்தம்.

எத்தனையோ பிராணிகளுக்கு வால் இருக்கிறது. அதை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக பயன் படுத்துகின்றன.

குரங்கிற்கு வால் இருக்கிறது.

எதங்காக?

அது வாலை இன்னொரு கை போன்று உபயோகப் படுத்துகிறது.

அடிக்கடி அங்கும் இங்கும் தாவும் போது எதையாவது கெட்டியாகப் பிடித்துக் கொள்வதற்கு வால் உதவுகின்றது.

முதலைக்கு வால் இருக்கிறது. எதற்காக?

நீரில் நீந்துவதற்கு அது மிகவும் உபயோகப்படுகிறது.

அணிலுக்கு வால் இருக்கிறது. எதற்காக?

அணில் மிகவும் உயரமான இடத்தில் வேகமாகத் தாவி ஓடும். அப்படி ஓடும் போது தவறி கீழே விழுந்து விடாமல் இருப்பதற்காக வாலை அப்படியும் இப்படியும் ஆட்டும்.

சர்க்கஸில் கம்பி மீது நடப்பவர்கள் கையையும் காலையும் அப்படியும் இப்படியும் ஆட்டி சமநிலைப் படுத்துகிறார்களல்லவா அது போலத்தான்.

கங்காரு வேகமாகத் தாவித்தாவி ஓடும். அப்படிப் பாயும் போது தவறாமல் இருப்பதற்காக வாலை உபயோகப்படுத்துகிறது.

அதுமட்டுமல்ல; சில சமயம் அது என்ன பண்ணும் தெரியுமா?

தன்னுடைய பின்னங்கால் மீது உட்கார்ந்திருப்பதற்கு வாலை ஒரு ஸ்டூல் மாதிரிப் பயன்படுத்தும்.

முயலைப் பார்க்கும் போது அதற்கு எதற்கு வால் ? அதனால் உபயோகம் ஒன்றும் இல்லையே என்றுதான் தோன்றும்.

ஆனால் அப்படியில்லை.

முயலுக்கு இருக்கும் வால் அதற்கு ஒரு பாதுகாப்பு கேடயம். எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஓடிக்கொண்டிருக்கும் போது தாய் முயல் வாலை அப்படியும் இப்படியும் அசைக்கும்.

அந்த அசைவைப் பார்த்து விட்டுத்தான் குட்டி முயல்கள் தாங்கள் எப்படி ஓட வேண்டும் என்பதை புரிந்து கொள்ளும்.

வால் இயற்கையாக எவற்றுக்கு உள்ளதோ அவை அதை அர்த்தத்துடன் உபயோகப் படுத்திக் கொண்டிருக்கிறது.

அனுமர் கூட இலங்கேஸ்வரனுக்கு முன்னால் தன்னுடைய தன்மானத்தைக் காட்டுவதற்கு வாலை உபயோகப்படுத்தினார்.

இருக்கிற வாலை இப்படி எல்லோரும் உபயோகப் படுத்தினார்கள். ஆனால் மனிதன் இல்லாத ஒன்றை இருப்பதாக கற்பனை செய்து கொண்டிருக்கிறான்.

எல்லா இடத்திலும் வாலாட்டிக் கொண்டிருக்கிறான்.

என்னிடம் வாலாட்டாதே! ஒட்ட நறுக்கிடுவேன்! என்ற எச்சரிக்கை வேறு செய்கிறான்.

இதற்கெல்லாம் என்ன காரணம் என்று நினைக் கிறீர்கள்?

தான் என்ற அகந்தைதான். இது எங்கே போய் முடியப் போகிறதோ?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அடுத்த வருடம் முதல் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாற்றம்

## கல்வியமைச்சர் தெரிவிப்பு

அடுத்த வருடம் முதல் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் மாற்றங்கள் கொண்டு வரப்படும். பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெறும் அனைத்து மாணவர்களுக்கும் நற்சான்றிதழ்கள் வழங்கப் படும் எனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வத்தகாமம் கல்வி வலயத்தில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக் கையில்,

புலமைப்பரிசில் பரீட்சை 10 வயதுப் பிள்ளைக்கு ஒரு சுமையாகவும் அழுத்தம் கொடுக்கும் ஒன்றாகவும் உள்ளது. மாணவர்களை விடப் பெற்றோர்களே விசேடமாகத் தாய்மார்களே பரீட்சை குறித்து மன எழுச்சிக்குட்படுகின்றனர்.

இதன் காரணமாக சித்தியடையாதவிடத்து தமது பிள்ளைகளைக் கண்டிக்கின்றனர்.

இன்னும் ஒரு புள்ளி எடுத்திருந்தால் தம்பிள்ளையும் சித்தியடைந்திருப்பானே என 140 புள்ளி எடுத்த மாணவனைச் சுட்டுகின்றனர்.

சித்தியடையாத மாணவன் புலமைப்பரிசில் சலுகை பெற தெரிவு செய்யப்படவில்லையே தவிர சித்தியடையாமல் இல்லை.

எனவே குறைந்த மட்ட சித்திப் புள்ளியான 35 புள்ளிகளை இரண்டு பாடங்களிலும் பெற்று 70 புள்ளிகள் பெற்றிருப்பின் அம்மாணவன் சித்தியடைந்தவராகக் கருதப்பட்டுசான்றிதழ் வழங்கப்படும். ஆனால், அவர் புலமைப்பரிசில் உதவி நிதியைப் பெற முடியாது போகலாம்.

சிரமப்பட்ட மாணவரின் மன திரும்பதியைக் கருதி அவருக்கு நற்சான்றிதழ் வழங்கப்படும். தேவையாயின் அவரது முன்னேற்றத்தை நிரூபிக்கும் வேறு ஆவணமாக இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு செய்யும் போது சித்தியடையவில்லை என்ற குறை இருக்காது என்றார். (ஸ்ரீ-2)

# கணித, விஞ்ஞான பொது அறிவுப் போட்டிகள்

தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியின் நூற்றாண்டுவிழாவினை முன்னிட்டு விஞ்ஞான மன்றம் நடத்தும் கணித, விஞ்ஞானப் பொது அறிவுப்போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யா/மகாஜனாக் கல்லூரி, யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பரீட்சை நிலையங்களில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

எனவே, விண்ணப்பித்த பாடசாலை பரீட்சார்த்திகளை தவறாது கலந்து கொள்ளுமாறு யா/மகாஜனாக் கல்லூரி அதிபர் திருமதி. எஸ். அனந்தசயனன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள், பரீட்சை நிலையம் ஏற்கனவே பாடசாலைகளுக்குதபாலில் அனுப்பி வைக் கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

*21.09.2010*
*(புரட்டாதி 5, செவ்வாய்க்கிழமை)*
*திரியோதசி முற்பகல் 11.06 மணிவரை*
*சதயம் முழுவதும்*
*இராகு காலம் 3.02-4.32 மணிவரை*
*சுபநேரம் 10.32-12.02 மணிவரை*
*நடேசரபிஷேகம்.*

**மேடம்** சிவ வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழி தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**இடபம்** தொலைபேசி மூலம் பொன்னான செய்தியொன்று வந்து சேரும், புதிய தொழில் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், மாலையில் பொருள் சேர்க்கை ஏற்படும், ஆரோக்கியம் சீராக இருக்கும்.

**மிதுனம்** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்ய சில பொருட்களை விற்பனை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**கடகம்** சிவசக்தி வழிபாட்டால் சிந்தை மகிழும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**சிங்கம்** இறை வழிபாட்டால் இன்பம் அதிகரிக்கும் நாள், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், புதிய நபர்களின் அறிமுகம் கிட்டும், சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கன்னி** கூட்டு முயற்சி வெற்றி பெறும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரும், உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும் நாள், கடிதம் நல்ல தகவல்களைக் கொண்டு வரும்.

**துலாம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், வியாபார விருத்தி ஏற்படும், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், புத்திரர்களால் மகிழ்ச்சியுண்டாகும்.

**விருச்சிகம்** செல்வம் பெருக சிவனை வழிபட வேண்டிய நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும், பயணங்களால் பலன் உண்டு, பாராட்டும், புகழும் அதிகரிக்கும்.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புகள் அனுசரணையாக நடந்து கொள்வர், குடும்பத்தில் குதூகலம்தரும் சம்பவங்கள் நடைபெறலாம்.

**மகரம்** பணம் பல வழிகளில் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், திருமணப் பேச்சுக்கள் சாதகமாக அமையலாம், வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், சிந்தனை மிகுதியாகும், அதிகாரிகளின் அனுசரணை குறைவாகக் காணப்படும்.

**மீனம்** உறவினரின் சொல்லுக்கு அனுசரணை காட்டுவீர்கள், தொழிலில் சிறு மாற்றங்கள் செய்யும் சூழ் நிலை அமையலாம், தூரதேசச் செய்தி வியப்படைய வைக்கும்.

வளவன்

# செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தரம் III பாடசாலை அதிபர்களுக்கான கல்வியின் பண்புசார் தரத்தை உறுதிப் படுத்தல் செயற்பாடு குறித்த செயலமர்வு எதிர்வரும் 23, 24, 25 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ்.கல்விவலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

இச்செயலமர்விற்கு பாடசாலை அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலய கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வெளிவாரி மருந்தாளர்களின் விபரம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

வெளிவாரியாக மருந்தாளர் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்து இலங்கை மருத்துவ சபையின் அனுமதிப் பத்திரங்களைப் பெற்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்தவர்களுக்கு தனியார் மருந்தகங்களில் வேலையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

எனவே, தகுதியானவர்கள் இலக்கம், 572/3 ஆஸ்பத்திரி விதி, யாழ்ப்பாணத்தில் உள்ள குறித்த பணிமனைக்கு வருகைதந்து பதிவு செய்யுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 90 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 70 |
| தக்காளி | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 80 | 60 |
| கரட் | 70 | 80 | 80 |
| பூசணி | 40 | 35 | 30 |
| புடோல் | 40 | 30 | 30 |
| வாழைக்காய் | 40 | 45 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 65 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 40 | 70 |
| பாகற்காய் | 80 | 80 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 70 |
| பயற்றங்காய் | 50 | 50 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 30 | 20 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 90 |
| போஞ்சி | 100 | -- | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 70 |
| கீரை – 1 பிடி | 20 | 25 | 25 |
| தேசிக்காய் | 60 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-40 | 30 |



யாழ். மலரும் பூக்கள் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளி இணைந்து வழங்கும் கல்விக் கண்காட்சியும், கலைநிகழ்வும் நேற்று யாழ்.மத்தியகல்லூரி ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்றது.இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், விருந்தினர்கள் மற்றும் ஆசிரியர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் மாணவ,மாணவிகளின் கலைநிகழ்வு இடம்பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் ஊழியர் நலன்புரி சங்க வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சங்கத்தின் தலைவர் செல்வி வி. சிவக்கொழுந்து தலைமையில் நடைபெறும் என்று செயலாளர் ப.பற்குணநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-7-29)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சகல நல்லூர் பிரதேச கலைஞர்களையும் கலந்துகொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கருத்தாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சர்வதேச மார்சியக் குழுவின் ஏற்பாட்டில் இலங்கை அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தம் குறித்த வர்க்க எதிரியின் அரவணைப்புக்கு திரிபு வாதத்தின் தவிர்ப்பு என்னும் விடயம் தொடர்பான கருத்தாடல் நிகழ்வு நாளை புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இல33,முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் யாழ்.கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆரம்ப உரையை சொ. சிவபாலன் வழங்கவுள்ளார். (ஸ்ரீ-4)

## மீள்குடியேற்றப்பட்ட மக்கள் கடற்றொழிலில் ஈடுபட இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பொது மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள போதிலும் அவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு இதுவரை அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை.

இதனால் இப்பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்கள் கடல் உணவுகளைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனையடுத்து தங்களை விரைவாக கடற்றொழிலில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என இப்பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விரைவில் கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என படையினர் மீனவர்களிடம் உறுதி அளித்துள்ளனர். (ஸ்ரீ-7-43)

## கால்நடைகளை இறைச்சிக்காக அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மாமுனை முதல் ஆழியவளை வரையுமான பகுதிகளில் பெருமளவு கால்நடைகள் (ஆடு, மாடு) இறைச்சிக்காக கொல்லப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல் தெரிவிக்கின்றது.

கடந்த 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தங்களது பெருந்தொகையான கால்நடைகளை கைவிட்டு சென்றுள்ளனர். இந்நிலையில் தற்போது மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளமையை அடுத்து மேற்படி கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன.

இதில் குறிப்பாக இன்னும் மீள்குடியேற்றப்படாமல் உள்ள கட்டைக்காடு,கேவில், நித்தியவெட்டை,போக்கரப்பு மற்றும் வண்ணாங்குளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் பெருமளவிலான கால்நடைகள் தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளிற்கு செல்கின்றன.

இதனால் இப்பகுதி மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுவதற்கு முன் தமது கால்நடைகள் அழிக்கப்பட்டு விடுமோ என்று அச்சம் கொள்கின்றனர்.

எனவே பொறுப்புள்ள அதிகாரிகள் இவ்வாறான கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதை தடுத்து நிறுத்தி இந்தப் பகுதி மக்கள் முற்றுமுழுதாக மீள்குடியேற்றம் செய்யப்பட்டு தமது கால்நடைகளை தாம் பெறும்வரை இவ்வாறான இந்தத் தீய செயலை தடுத்து நிறுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கிறார்கள். (ஸ்ரீ-7-64)

## கழகங்களுக்கிடையிலான மென்பந்துச் சுற்றுப்போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் கழகத்தினரிடமிருந்து மென்பந்து சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள மேற்படி சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் சாவகச்சேரி கச்சாய் வீதியில் அமைந்துள்ள பினான்ஸ் கம்பனி அலுவலகத்தில் கழகத்தின் விளையாட்டுத்துறைத் தலைவர் லயன் க. தர்சனுடன் தொடர்பு கொள்ளும்படி கழகத்தலைவர் லயன் தி.முருகதாஸ் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-7-29)

## மீள்குடியமர்வையடுத்து முன்பள்ளி ஆரம்பம்

(திருநெல்வேலி)

வடமராட்சி மாமுனைப் பகுதியில் உள்ள கலைமகள் முன்பள்ளி தற்போது மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த 4 வருட இடைவெளியின் பின்னர் அப்பகுதியில் மக்கள் மீளக்குடியேறி உள்ளதை அடுத்து மேற்படி பாடசாலை இயங்கத் தொடங்கியது.

இக் கட்டடம் கடந்த கால யுத்தத்தில் சேதமடைந்துள்ள போதும் இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி இப் பாடசாலையை மீண்டும் ஆரம்பித்துள்ளதாக மாமுனை முன்பள்ளி ஆசிரியர் த.கலா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-7,43)

## அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் யங்கென்றிஸ் அணி சம்பியனானது

(கரவெட்டி)



மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தினால் அழைக்கப்பட்ட யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்று வந்த உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7மணிக்கு கழக மைதானத்தில் மின் ஒளியில் நடைபெற்றன.

இறுதிப்போட்டியில் இளவாலை யங்கென்றிஸ் அணியும் வதிரி டயமன்ஸ் அணியும் மோதின. பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் மத்தியில் ஆட்டம் விறுவிறுப் பாக ஆரம்பமானது. இடைவேளை வரை யங்கென்றிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

தொடர்ந்து பரபரப்பாக நடைபெற்ற ஆட்ட இறுதியில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று யங்கென்றிஸ் அணி சம்பியனாகியது.

இதில் தொடர்நாயகன், ஆட்டநாயகன், வளாந்து வரும் இளம்வீரருக்கான விருதை கென்றிஸ் அணிவீரர் ஞானறூபன் பெற்றுக் கொண்டதுடன் சிறந்த கோல் காப்பாளராக வதிரி டயமன்ஸ் அணிவீரர் ஜோண் கொலிங்டனும் யாழ்.மாவட்டத்தில் அதிக அனுபவம் மிக்க வீரராகவும் அதிக போட்டிகளில் விளையாடிய ஊரெழு றோயல் அணிவீரர் தர்மகுலசிங்கம் ஆகியோர் விரு தினைப் பெற்றனர்.

இவ் இறுதிநிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், கரவெட்டி பிரதேச சபைச் செயலர் எஸ்.குலநாயகம், நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரி.காங்கரா, மூன்றாவது சிங்க றெஜிமன்ட் கட்டட அதிகாரி மேஜர் பெரகரா, உதைபந்தாட்ட லீக் உப தலைவர் மா.நவநீதமணி, செயலாளர் ரி. வரதராஜன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றிபெற்ற வீரர்களுக்கான வெற்றிக் கேடயங்களை வழங்கிக் கௌரவித்தனர். (ஸ்ரீ-24)

## ஏழாவது ஊழி நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பொ.ஐங்கரநேசன் எழுதிய "எழாவது ஊழி" சுற்றுச்சூழல் நூல்வெளியீட்டு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-4)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஈவினை மத்தி திருவருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோவிலின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 13 ஆம் திகதி காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெற்று வருகிறது.

இவ்வுற்சவத்தில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 6 மணிக்கு சப்பறமும் நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு இரதோற்சவமும் நாளை மறுதினம் முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ-4)




## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் உள்ளுராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக திணைக்களத் தலைவர்களுடனான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் நகர அபிவிருத்தி ஆலோசனை சபைக்கூட்டம் பிற்பகல் 3 மணிக்கும் சபையின் மாநாட்டு மண்டபத்தில் சபை செயலாளர் செல்வி. வி.சிவக்கொழுந்து தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-7-29)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தைச்சேர்ந்த கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கான அவசர கலந்துரையாடல் இன்று நண்பகல் 12.30 மணிக்கு யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வன்னி ஆசிரியர்களுக்கு எதிராக ஒரு சொல்லும் நான் பேசவில்லை

## சுரேஷ் பிறேமச்சந்திரன் விளக்கம்

சுரேஷ் பிறேமச்சந்திரனின் கருத்துக்கு வன்னி ஆசிரியர்கள் பதில் என 18ஆம் திகதி வலம்புரியில் வெளியான செய்தி தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் அனுப்பிய விளக்கம் இங்கு தரப்படுகின்றது.


"உரிய நேரத்துக்கு கடமைக்கு செல்லுமாறு வன்னிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு பணிப்பு" என்ற தலைப்பில் 16 ஆம் திகதி செப்டெம்பர் மாதம் வெளிவந்த வலம்புரி செய்தி தொடர்பாக "சுரேஷ் பிறேமச்சந்திரன் கருத்துக்கு வன்னி ஆசிரியர்கள் பதில்" என்ற தலைப்பில் 18ஆம் திகதிய இதழில் இன்னொரு செய்தி பிரசுரமாகியிருந்தது.

இக் கருத்துக்கள் தொடர்பான உண்மைத் தன்மையினை வெளிப்படுத்த வேண்டியது எனது கடமையென நான் கருதுகின்றேன்.

முதலாவதாக வன்னியில் நேரம் பிந்தி ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்கின்றார்கள் என்ற எந்த முறைப்பாட்டையும் நான் அந்தச் சபையில் தெரிவிக்கவில்லை. ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகள் அங்கு பேசப்பட்ட பொழுது ஆசிரியர்கள் எதிர்நோக்கும் துன்பகரமான சூழ்நிலைகள், போக்குவரத்துப் பிரச்சினைகள், ஆசிரியர் பற்றாக்குறை, மாணவர்களின் கல்வி பாதிப்பு போன்ற விடயங்கள் தொடர்பாக நான் நேரில் பார்த்து கண்டறிந்த விடயங்கள் தொடர்பாகக் கூறி இவற்றுக்குத் தீர்வு வேண்டுமென நான் கூறியிருந்தேன். இதற்கு நான் உதாரணமாக கூறிய விடயத்தினை குறிப்பிடுகின்றேன். கிளிநொச்சி மாவட்டம், ஸ்கந்தபுரத்தில் இருந்து 9 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் இருக்கக் கூடிய கண்ணகிபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் நிலைவரம் தொடர்பானது.

ஆண்டு ஒன்றிலிருந்து ஒன்பது வரையில் உள்ள இப்பாடசாலையில் தலைமை ஆசிரியருடன் சேர்ந்து 4 ஆசிரியர்களே உள்ளனர். மாணவர்கள் நிலத்தில் இருந்தே கல்வி கற்கின்றனர். ஆசிரியர்களுக்கே இருப்பதற்கு கதிரைகள் இல்லை. கோப்புக்கள் வைக்க இடமில்லை. கூரைகள் இல்லை போன்ற அத்தனை பிரச்சினைகளும் அந்தப்பாடசாலையில் இருந்தன .இதற்கு மேலாக இங்கு கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களில் ஓரிருவர் யாழ்ப்பாணத்தில் இருந்து அதிகாலை புறப்பட்டு ஸ்கந்தபுரம் போய் அங்கிருந்து 9 கிலோ மீற்றர் தூரம் மிதிவண்டியில் அந்தப் பாடசாலைக்கு போக வேண்டும். இப்படிப் போகும் பொழுது ஒரு சில நேரங்களில் பிந்திப் போவதும் தவிர்க்க முடியாதது. இந்த ஆசிரியர்கள் தங்குவதற்கு விடுதிகளோ அல்லது வாடகைக்கு தங்குவதற்கு வீடுகளோ கிடையாது. இந்த நிலையில் இவர்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். குறைந்த பட்சம் போக்குவரத்து சேவையை பாடசாலை வரையிலாவது விஸ்தரிக்க வேண்டும். இந்தக் கருத்துக்கள் தான் என்னால் அங்கு முன்வைக்கப்பட்டன. இதனை ஓர் உதாரணமாகக் கூறி, வன்னியில் இவ்வாறான பிரச்சினைகள் பல பாடசாலைகளிலும் உள்ளதென்பதையும் கூறினேன்.


எனவே ஆசிரியர்களின் தேவைகளையும் அவர்களது கஷ்டங்களையும் அவை நிவர்த்திக்கப்பட வேண்டியதன் அவசியத்தை பற்றியும் பேசினேனே .தவிர ஆசிரியர்களுக்கெதிராக நான் ஒரு சொல்லும் பேசவில்லை என்பதை இவ் அறிக்கையை வெளியிட்ட ஆசிரியர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.



வன்னியில் பல கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்து எம்மாலான சிறிய உதவிகளை அவர்களுக்கு செய்வதை நோக்கமாகக் கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் வன்னியின் பல கிராமங்களுக்குச் சென்று வருகின்றனர். இதன் ஒரு பகுதியாகத்தான் நானும் பல கிராமங்களுக்குச் சென்றுவருவதுடன் கண்ணகிபுரத்து மக்களைச் சந்தித்தபொழுது அவர்கள் எம்மை அழைத்துச் சென்று தமது பாடசாலையின் நிலைமையையும் காண்பித்தனர். இதனை நான் அமைச்சர்கள்,ஆளுநர், அதிகாரிகள் உள்ள சபையில் தெரிவித்து சில தீர்வுகளைக்காண முற்பட்டேன் என்பது தான் உண்மை.

இறுதியாக, மிகவேகமாகவும் இறுதிப் பகுதியில் சில கிண்டல்களுடனும் இவ்வறிக்கையை தயார் செய்து 68 ஆசிரியர்களின் கையொப்பத்துடன் பத்திரிகைக்கு அனுப்பி வைத்த எந்த ஓர் ஆசிரியராவது என்னுடன் தொடர்பு கொண்டு இதன் உண்மைத் தன்மையை அறிய முற்படவில்லை.

மேலதிகமாக இவ்விடயம் பற்றி பேச இதில் கையெழுத்திட்ட ஆசிரியர்கள் விரும்புவார்களாயின் இவர்கள் எல்லோருடனுமோ அல்லது இவர்க ளில் ஒரு பகுதியினருடனோ அல்லது இவர்கள் அமைப்பாக ஒன்றுபட்டிருந் தால் அவர்களுடனோ வன்னியிலோ, யாழ்ப்பாணத்திலோ பேசுவதற்கு நான் விரும்புகின்றேன். இதற்கு அவர்கள் முன்வருவார்கள் என்ற நம்பிக்கையுடன்



சுரேஷ் க.பிறேமச்சந்திரன்,
நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ்.மாவட்டம்



இலங்கை மத்திய வங்கியால் இலங்கை வங்கியின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் குழுக்கள் ஒன்றிணைந்து நிறுவப்பட்ட அபிவிருத்தி நிலையங்களின் தலைவர்,செயலாளர்,பொருளாளருக்கான பயிற்சி வகுப்பு கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறைப்பிரதேசசபை பொது நூலகத்தில் மத்திய வங்கியின் வறுமை ஒழிப்புத்திட்ட தலைமை அதிகாரி ஸ்ரீ பத்மநாதன் தலை மையில் நடைபெற்றது. இதில் வறுமை ஒழிப்புத்திட்ட பயிற்றுவிப்பாளர் காமினி சிறீநந்த பயிற்சியை நடாத்துவதையும் கலந்துகொண்ட யுவதிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மருதங்கேணி நிருபர்)

## இவ்வருட காலாண்டில் கடற்றொழிற்றுறையில் 18.3 சதவீத வளர்ச்சி

(கொழும்பு)

இலங்கையின் கடற்தொழில் துறையில் இவ்வருட காலாண்டில் 18.3 சதவீத வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியான சூழ்நிலையையடுத்து வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டமையே இந்த வளர்ச்சிக்கான காரணங்களாகும் என அத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் வடமாகாண கடற்தொழில் நடவடிக்கைகளில் 13.4சத வீத வளர்ச்சி ஏற்பட்டுள்ளதுடன் கிழக்கு மாகாணத்தில் 45.8 சதவீத வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-7)

## கடல் விமான சேவைகள் விரைவில் ஆரம்பம்

வெளிநாட்டு மற்றும் உள் நாட்டு உல்லாசப் பயணிகளின் நன்மை கருதி கடல் விமான சேவைகளை விரைவில் அறிமுகப் படுத்தப்படவுள்ளதாக பிரதி அமைச்சர் சரத்குமார குணரத்ன தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அருகாமையில் உள்ள மட பொக்கே நீர் நிலையில் இருந்து இந் நாட்டின் பல பகுதிகளுக்கு செல்வதற்கான கடல் விமான சேவை ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சேவையின் மூலம் நீர் மாசுபடாது என்பதுடன் மீன் பிடி நடவடிக்கைகளுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## வங்காலையில் 2000 ஏக்கரில் காற்று வலு மின் உற்பத்தி

(கொழும்பு)

மன்னார் வங்காலையில் இருந்து சவுத்பார் வரையிலான கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் காற்று வலு மின் உற்பத்தி மேற்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

மேற்படி திட்டத்திற்கென 2ஆயிரம் ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்படவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.(ஸ்ரீ)

## கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களுக்கான தற்காலிக தேர்தல் அலுவலகம் திறப்பு

(கொழும்பு)

வடபகுதியில் வாக்காளர் இடாப்புத்திருத்தப் பணிகளைத் துரிதப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் வாக்காளர் இடாப்புத் திருத்தப் பணிகளை இலகுபடுத்துவதற்காகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான தற்காலிகத் தேர்தல் அலுவலகமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஏ.எஸ்.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்த அலுவலகத்தினூடாக வாக்காளர் இடாப்புத் திருத்தப் பணிகளுக்கான படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் இதனைத் தவிர கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகளும் அளிக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## முன்னணி பாதாள உலக குற்றவாளி பொலிஸாரால் சுட்டுக்கொலை

அம்பிலிபிட்டிய உள்ளிட்ட பிரதேசங் களில் செயற்பட்டுவந்த முன்னணி பாதாள உலகக் குற்றவாளியொருவர் கடந்த 18ஆம் திகதி சனிக்கிழமை பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கிஞ்சிகுனே ஹினா என்ற நபரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மறைத்துவைத்திருந்த ஆயுதங்களைக் கண்டறிவதற்காக அழைத்துச் செல்லப்பட்டபோது பொலிஸ் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கியைச் சந்தேக நபர் பறிக்க முயன்றதாகவும் இதன் காரணமாகவே அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொல்லப்பட்டவர் கொலை, கொள்ளை மற்றும் கப்பம் பெறுதல் உள்ளிட்ட பல குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)



யாழ். கல்வி வலய அதிபர்களுக்கான கல்வி தர மேம்பாடு சம்பந்தமான செயலமர்வு நேற்று யாழ்.கல்வி வலயத்தில் நடைபெற்றது. இதில் வலயக் கல்விப் பணிப்பாளர் நாயகம் திருமதி அ.வேதநாயகம் ஆரம்ப உரை நிகழ்த்துவதையும் கலந்து கொண்ட அதிபர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# கலால் திணைக்களத்தினால் கடந்த வாரம் 43 பேர் கைது

(கொழும்பு)

நாடு முழுவதிலும் கடந்த வாரம் கலால் வரித்திணைக்களம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போது சட்டவிரோத மதுபானம் மற்றும் போதைப் பொருள் விற்பனை தொடர்பாக 43 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 11 பேர் சட்டவிரோதமாக சாராயத்தை விநியோகம் செய்ததாகவும் 13 பேர் அனுமதிப்பத்திரமின்றி மதுசாரம் விநியோகம் செய்ததாகவும் 8 பேர் பியர் மற்றும் வெளிநாட்டு மதுபான வகைகளை விற்பனை செய்ததாகவும் மற்றும் 9 பேர் சாராயம் விற்பனை செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவனல்லை, கேகாலை, துல்ஹிரியா, பண்டாரவளை, உனவட்டுன, பலப்பிட்டிய, பதுளை மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் பெறுமதி 4 இலட்சம் ரூபாவாகும். நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த சட்டவிரோத வியாபாரம் தொடர்பாக பொது மக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளுக்கிணங்க உபுல் சேனவிரட்ன தலைமையிலான குழுவே இந்த விசாரணைகள் மேற்கொண்டது.

கைது செய்யப்பட்டவர்களில் அதிகமானோர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாக கொழும்பு விசேட கலால் திணைக்கள பிரிவு தலைவர் எஸ்.ஈ.சேனவிரட்ன தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# பிரபலமான திறமையான வேட்பாளர்கள் உள்ளூராட்சி தேர்தலில் களமிறக்கப்படுவார்கள்

## ஐ.தே.க. எம்.பி. கயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி சிறந்த முறையில் தயாராகி வருகின்றது. கீழ் மட்டத்திலிருந்து நாங்கள் பணிகளை ஆரம்பிக்கவுள்ளோம். பிரபலம் வாய்ந்த மற்றும் திறமையான வேட்பாளர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமது கட்சியின் சார்பில் களமிறக்கப்படுவார்கள் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் ஆரம்ப பகுதியில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான ஐக்கிய தேசிய கட்சியின் தயார் நிலை தொடர்பில் விபரிக்கையிலேயே கயந்த கருணாதிலக்க எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த வருட ஆரம்பத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடைபெறும் என்று தகவல்கள் வெளியாகின்றன. எவ்வாறெனினும் தேர்தல் ஒன்றுக்கு நாங்கள் தயாராகவேண்டியுள்ளது.

மேலும் அடுத்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் புதிய தேர்தல் முறைமையின் அடிப்படையிலேயே நடைபெறும் என்று கூறப்படுகின்றது. அப்படியாயின் புதிய தேர்தல் முறைமைக்கு அமைய ஐக்கிய தேசிய கட்சி தேர்தலுக்கு தயாராகவேண்டிய தேவையுள்ளது.

எனவே ஐக்கிய தேசிய கட்சி புதிய உள்ளூராட்சிமன்ற தேர்தல் முறைமைக்கு அமைய தேர்தலுக்கு தயாராகும். புதிய உள்ளூராட்சி மன்ற சட்டமூலம் தொடர்பில் சில தெளிவுபடுத்தல்கள் எங்களுக்கு தேவைப்படுகின்றது. அது தொடர்பான தெளிவுபடுத்தல்களை அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கின்றோம். மேலும் மிகவும் பிரபலமான மற்றும் திறமையான வேட்பாளர்களை உள்ளூராட்சி தேர்தலில் களமிறக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இது விடயத்தில் கீழ் மட்டத்திலிருந்த எமது கட்சி தயாராகிவருகின்றது. மேலும் இவ்விடயங்களை ஆராய குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது என்றார். (ஸ்ரீ-2)

# போக்குவரத்து அமைச்சுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

பஸ் கட்டணத்தை அதிகரிக்கப் போவதில்லை என்று அறிவித்துள்ள போக்குவரத்து அமைச்சுக்கு எதிராகத் தாம் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

தனியார் பஸ் கட்டணத்தை 2 வீதமாக அதிகரிப்பது தொடர்பில் இரண்டு வாரங்களுக்கு முன் போக்குவரத்து அமைச்சுக்குச் சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதேவேளை தனியார் பஸ் சேவைகளுக்கு எவ்விதமான நேர அட்டவணைகளும் போக்குவரத்து அமைச்சு வழங்கவில்லை எனவும் வாகன நெரிசல்களால் எரிபொருள் விரயமாக்கப்படுவதாகவும் அதனால் பஸ் கட்டணத்தை அதிகரிக்கத் தாம் கோரியதாகவும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயவர்தன தெரிவித்துள்ளார். இது குறித்து போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம கருத்துத் தெரிவிக்கையில்,

என்ன காரணங்களையிட்டும் தனியார் பஸ் உரிமையாளர்கள் எந்தவித போராட்டங்களில் ஈடுபட்டாலும் கூட பஸ் கட்டணத்தை உயர்த்தப் போவதில்லையெனவும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களின் கட்டணமும் வழமை போன்றே இருக்கும் எனக் கூறினார். (ஸ்ரீ-2)

# இலங்கைத் தமிழருக்கு ஆஸியில் ஐந்து வருட சிறைத்தண்டனை

(கொழும்பு)

ஆட்கடத்தலில் ஈடுபட்டு வந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவருக்கு அவுஸ்திரேலிய நீதிமன்றம் ஒன்று ஐந்தரை வருட சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

பத்மேந்திரா புலேந்திரன் (வயது 36) என்பவருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்களைச் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குக் கடல்வழியாக அழைத்து வரும் முகவராக செயற்பட்டு வந்துள்ளமையை இவர் நீதிமன்றில் ஒப்புக்கொண்டுள்ளார்.

இவர் அவுஸ்திரேலியாவின் மேற்கு சிட்னி மாநகரத்தில் உள்ள பெண்டல் மலைப் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் ஆவார்.

இவர் வழக்கு இடம்பெற்றுக்கொண்டிருந்த போதே மூன்றரை வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு விடுதலை பெறுகின்றமைக்கு அருகதை உடையவர் ஆவார். (ஸ்ரீ-2)

# ஆஸியில் புகலிடம் நிராகரிக்கப்பட்ட பிஜி நாட்டவர் தற்கொலை

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப்படவிருந்த 3 இலங்கையர்களும் ஒரு பிஜி நாட்டவரும் சிறையிலேறி போராட்டம் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது பிஜி நாட்டவர் கூரையிலிருந்து பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். இந்த நிலையில் அவரின் சடலத்தை நாட்டிற்கு அனுப்பி வைக்குமாறு பிஜி கோரிக்கை விடுத்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் விலாவுட் சிறைச்சாலையில் இந்த நால்வரும் புகலிடம் நிராகரிக்கப்பட்ட நிலையில் தமது நாடுகளுக்கு திருப்பி அனுப்புவதற்காக வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் அவர்களுக்கு நேற்று முன்தினம் காலை நாடுகடத்துவதற்கான ஆவணங்கள் கையளிக்கப்பட்டன. இதனை அடுத்தே சிறையின் கூரைமீதேறி போராட்டம் நடத்திய குறித்த நால்வரும் தம்மை நாடு கடத்த முற்பட்டால் கூரையில் இருந்து பாய்ந்து தற்கொலை செய்து கொள்ளப்போவதாக எச்சரித்தனர்.

இதன் போது பிஜி நாட்டு பிரஜை கூரையிலிருந்து பாய்ந்து தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# பருவ மழைக்கு முன் இடம்பெயர்ந்த அனைத்துமக்களும் மீள் குடியேற்றம்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

பருவமழை ஆரம்பிப்பதற்கு முன்னர் இடம்பெயர்ந்த அனைத்து மக்களையும் அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன் மூலம் வடபகுதியின் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்தமுடியுமென மீள் குடியேற்ற அமைச்சர் மில்ரொய் பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களின் எண்ணிக்கை 25 ஆயிரம் ஆகக் குறைவடைந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நிலக்கண்ணி வெடிகளை அகற்றியவுடன் தற்போது தற்காலிக முகாம்களில் இருக்கும் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

இறுதிக்கட்ட மோதல் நடைபெற்ற வெள்ளமுள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு மற்றும் புதுமாத்தளன் ஆகிய பிரதேச மக்களையே மீள் குடியேற்றவேண்டியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை ஆயிரத்து 100க்கும் அதிகமான படையினரும் அரச சார்பற்ற நிறுவனங்களும் வடபகுதியில் நிலக்கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



அகில இலங்கை சைவபரிபாலன சபையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் யாழ்.சைவ பரிபாலனசபை தலைவர் சிவநெறிப் புரவலர் த.சண்முகலிங்கம், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் அருணாசலம் கயிலாயபிள்ளை ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் க.குமாரவேல் சிறப்புரை நிகழ்த்துவதையும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்களின் "முத்தா மாணிக்கமா" நாடகம் இடம்பெறுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், சபையோர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# முட்டை விலையை அதிகரித்தால் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படும்

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அறிவிப்பு

(கொழும்பு)

முட்டை தட்டுப்பாட்டை தோற்றுவித்து முட்டை விலையை அதிகரித்தால் உடனடியாக முட்டைக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படும் என்று கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முட்டை விலை அதிகரிக்குமானால் அமைச்சின் லொறிகளை கோழி வளர்ப்போரின் பண்ணைகளுக்கு அனுப்பி முட்டைகளை கொள்வனவு செய்து லக்சதோச, பொருளாதார கேந்திரங்கள் மற்றும் கூட்டுறவுக் கடைகள் மூலம் பாவனையாளர்களுக்கு சந்தைப்படுத்தப்படும்.

இலங்கையின் சிறிய மற்றும் பாரிய அளவிலான கோழி வர்த்தகர்களின் சங்கம் என்ற பெயரில் புதிய சங்கமொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் வெள்ளை முட்டையொன்றை 12 ரூபாவுக்கும் சிவப்பு முட்டை ஒன்றை 12 ரூபா 50 சதத்துக்கும் தொகையாக விற்பதற்கு இந்தச் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# கரடியனாறு வெடிப்புச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு

கரடியனாறு வெடிப்புச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் இந்த நட்டஈட்டுத் தொகை வழங்கப்படவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற தருணத்தில் தாம் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்ததாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

விபத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நட்டஈடு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு மற்றும் காயமடைந்தவர்களுக்கு எவ்வளவு தொகை நட்டஈடு வழங்கப்படவேண்டுமென்பது இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கூடிய விரைவில் இந்த நட்டஈட்டுத் தொகை வழங்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# ரயில் நிலையங்களிலிருந்து பிச்சைக்காரர்கள் வெளியேற்றம்

(கொழும்பு)

பிரதான புகையிரத நிலையங்களிலிருந்து பிச்சைக்காரர்களை வெளியேற்றும் நடவடிக்கை நேற்று முன்தினம் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு ஆரம்ப நடவடிக்கையே எனவும் பின்னர் சிறிய புகையிரத நிலையங்களிலும் இத்தகைய நடவடிக்கைகள் தொடரும் என இலங்கை புகையிரதப் பேச்சாளர் விஜய் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கொழும்புக் கோட்டை, கண்டி,மாத்தளை மற்றும் காலி ஆகிய புகையிரத நிலையங்களில் புகையிரத நிலையப் பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் இணைந்து பிச்சைக்காரர்களை அகற்றும் நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் சமரசிங்க தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இளைஞர், யுவதிகளின் விடுதலை குறித்து நல்லிணக்க ஆணைக்குழு ஜனாதிபதிக்கு பரிந்துரை

முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளை விடுதலை செய்வது தொடர்பில் ஜனாதிபதிக்குப் பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் தலைவர் சீ.ஆர்.டி.சில்வா கிளிநொச்சியில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலை குறித்து பொறிமுறையொன்றைக் கண்டறிய ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான போதிய குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றனவா? இல்லையா? என்பதை ஆராய்ந்து அவர்களை விடுதலை செய்வதற்கு தாம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் பேச்சு நடத்துவதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளியில் சாட்சியமளித்த பொதுமக்களின் முறைப்பாடுகள் குறித்து பதிலளிக்கும் போதே குழுவின் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் நெருங்கிய உறவினர்களின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களின் முறைப்பாடுகள் எழுத்து மூலமாகவும் பெற்றுக் கொள்ளப்பட்டன.

அதேநேரம் முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள்,காணாமற் போனவர்கள் தொடர்பான விபரங்களை ஆணைக்குழுவின் கொழும்பு முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு குழுவின் தலைவர் கேட்டுக்கொண்டார்.

ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க நேரில் வர இயலாது போனவர்கள் செயலாளர், கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் பற்றிய ஆணைக்குழு, லக்ஷ்மன் கதிர்காமர் நிலையம், கொழும்பு -07 என்ற முகவரிக்குத் தமது முறைப்பாடுகளை அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புலிகளின் பிடியிலிருந்து இராணுவத்தினரின் பகுதிகளுக்குத் தப்பி வந்த வேளை நலன்புரி முகாம்களில் வைத்துக் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் குறித்த முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை விடுவித்துத் தர உதவுமாறும் ஆணைக் குழுவின் தலைவரிடம் கோரிக்கை விடுத்த பொதுமக்கள் இந்த ஆணைக்குழு தமக்கு நியாயம் பெற்றுத் தருமென நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தில் சுயமாக முன்வந்து சாட்சியமளிக்கவென சுமார் நூறு பொதுமக்கள் வருகை தந்திருந்ததுடன் அநேகர் விதவைப் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பச்சிலைப்பள்ளியில் (பளை) தான் தீவிர மோதல் இடம்பெற்றதாகவும் இதனால் அநேகமான பெண்கள் விதவைகளாகி உள்ளதாகவும் அங்கு சாட்சியமளித்த ஒருவர் சுட்டிக் காட்டினார். எனவே அந்தப் பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உதவுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இங்கு சாட்சியமளித்த அநேகமான பெண்கள் தமது கணவர்களை விடுவித்துத் தருமாறு மன்றாட்டமாகக் கோரிக்கை விடுத்தனர். அவர்களின் கோரிக்கைகளைச் செவிமடுத்த ஆணைக்குழுவின் உறுப்பினர் திருமதி மனோரி இராமநாதன் "நாங்களும் மனிதர்கள். உங்களுக்கு நன்மை பெற்றுத் தருவதற்காக எம்மால் இயன்ற அனைத்தையும் உதவியாகச் செய்வோம் என்றார்.

விசாரணைகளின்பின்னர் மீள்குடியேற்ற கிராமங்களுக்குச் சென்ற ஆணைக்குழுவின் தலைவர் அம் மக்களின் குறைநிறைகளையும் கேட்டறிந்து கொண்டார். குழுவின் பகிரங்க விசாரணைகளை கடந்த 18ஆம் திகதி கண்டாவளை, பூநகரி ஆகிய இடங்களில் இடம் பெற்றன. (ஸ்ரீ-2)

# வவுனியா மாவட்டத்தில் 2900 வீடுகளை நிர்மாணிக்க ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானம்

## வவு.அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் புதிதாக 2 ஆயிரத்து 900 வீடுகளை நிர்மாணிக்க ஐரோப் பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி.பி.எம்.எஸ். சார்ள்ஸ் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் வடக்கில் 50 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கும் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் புதிதாக 7 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கு மேலதிகமாகவே ஐரோப்பிய ஒன்றியம் 2 ஆயிரத்து 900 வீடுகளை வழங்கவிருப்பதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியமானது குறிப்பாக மோதல்களுக்குப் பின்னர் கடந்த 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட்டிலிருந்து வவுனியா மாவட்டத்தில் குடியேறியுள்ள தெரிவு செய்யப்பட்ட 2 ஆயிரத்து 900 குடும்பங்களுக்காகவே புதிதாக வீடுகளை வழங்க முன்வந்துள்ளது.

மீள்குடியேறியவர்கள் தொடர்ந்தும் அதே பகுதியில் வசித்து வருவது உறுதிப்படுத்தப்படும் பட்சத்திலேயே அவர்களுக்கு வீடு நிர்மாணிப்பதற்கான நிதியுதவி பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கான பயனாளிகளை தெரிவுசெய்யும் வேலைத்திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலாளர் பிரிவுகளினூடாக இதற்கென பிரத்தியேக விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.



கிடைக்கப்பெறும் நிரப்பப்பட்ட விண்ணப்பங்களுள் தெரிவுசெய்யப்பட்டோர் தொடர்பான விபரங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்குவதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் வீடொன்றின் நிர்மாணப் பணிகளுக்காக தலா 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அமைதி தரும் அதிர்ஷ்ட வீடு

வாஸ்து சாஸ்திரங்களைப் பற்றி குறிப்பிடும் போது கிராம வாஸ்து, நகர வாஸ்து, ஆலய வாஸ்து என்று வெவ்வேறு விதமாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு இடத்துக்கு ஏற்ப கட்டடங்களை அமைப்பதைப் பற்றி சாஸ்திரங்கள் விரிவாக விளக்கி இருக்கின்றன.

**குடிநீர் சேமிப்புத் தொட்டி பூமிக்கடியில் வடகிழக்கில் அமைவது நல்லது. கிழக்கு, வடகிழக்கு காற்று புகாமல் சுவர் எழுப்புவது தொல்லை தரக்கூடிய அமைப்பு. கிழக்கு மேற்கில் இடைவெளி விடும் போது கிழக்கில் கூடுதல் இடம் விடலாம். வடக்கு மேற்காக இடம் விடும்போது வடக்கில் கூடுதல் இடம் ஒதுக்கலாம்.**

ஆலய வாஸ்துவைப்பற்றி குறிப்பிடும் சிறப்பான பலநூல்கள் வடமொழியிலும், சில தமிழிலும் உள்ளன. ஒரு வாஸ்து நூல் கிழக்குப் பக்கம் படுக்கை அறை அமைவதைப் பற்றி வித்தியாசமாகக் கூறுகிறது. வாஸ்துசாஸ்திரத்தில் 'பிரம்மஸ்தானம்' என்று குறிப்பிட்டுள்ளபடி இப்போது இடம் ஒதுக்குவது சிரமம் ஆகும். இது தவிர வாஸ்துவில் சொல்லியுள்ளபடி சில அமைப்பது கடினமாக உள்ளது. இதற்குக் காரணம், தனித்தனி வீடுகள் என்ற நிலை மாறி அடுக்குமாடி குடியிருப்புகளாய் மிகச் சிறிய இடத்தில் இப்போது வீடுகள் அமைவதே. எனவே சாஸ்திரத்தில் கூறியுள்ளவற்றை முடிந்த அளவு கடைப்பிடிப்பது நல்லது தான்.


மனையின் கிழக்கு திசையில், வடக்கு, வடகிழக்கு திசையில் சற்றுக் கூடுதல் இடம் விடுவது நன்மை தரும். வசதி இருந்தால் கிழக்குப் பக்கம் அல்லது வடகிழக்கு பக்கம் வாசல் அல்லது ஜன்னல் அமைக்கலாம். சுற்றுச்சுவர் கட்டும்போது கிழக்குப் பக்கம் மதில் சுவர் உயரமாவதைத் தவிர்க்கலாம். கிழக்கும் வடக்கும் சந்திக்கும் வடகிழக்கில் உயர்ந்த மரம், வலுவான அடர்த்தி மிகுந்த மரங்கள் வைப்பதைத் தவிர்க்கலாம். துளசி செடி, மல்லிக்கொடி போன்றவை வடகிழக்கில் வைக்கலாம்.

பலர் வந்து செல்லும் அலுவலகம் போன்ற இடங்களில் கிழக்குப் பக்கத்தில் பொதுமக்கள் வந்து செல்லக்கூடிய இடம் அமைவது நன்மைதரும். கிழக்கு, வடகிழக்கு, ஆழ்துளை குழாய் கிணறு விசேஷமாக அமைவதும் நன்மை தரும். இவ்வாறு அமைவதால் வீட்டில் அமைதியும், ஆன்மீகச் சூழ்நிலையும் உண்டாகும்.

கிழக்கு , வடகிழக்கு நன்கு அமைந்தால் வீட்டின் வளர்ச்சி நல்லமுறையிலும், வீட்டின் தலைவ ருக்கு செல்வச் செழிப் பும் உண்டாகும். அரசு சம் பந்தமான விடய ங்களும் அனு கூலமாகும்.

அதேபோன்று, அக்கினி மூலை யாகிய தென்கிழக் கில் சமையல றை பெண்களு க்கு உயர்வைத் தரும்.வீட்டில் உள் ளவர்களுக்கு ஆரோக்கியத்தையும் ஆயுளையும் கொடுக்கும்.

அதேநேரத்தில் தென்கிழக்கில் சமையலறை அமைய முடியாவிட்டால் வாயு மூலையாகிய வடமேற்கில் அமைக்கலாம்.



ஆனால், கிழக்கு பார்த்து சமையல் செய் யும்படி சமையல் மேடை அமைய வேண்டும்.

பொதுவாக வீட்டிலுள்ள கிணற்றை தண்ணீர் இருந்தால் வாஸ்து தோஷம் என்று கூறி, மூடிவிடக்கூடாது. சரியானபடிகிணறு அமையாவிட்டால் அந்தக் கிணற்றிலுள்ள நீரைக் காலையில் எழுந்தவுடன் எடுத்து துளசிச் செடிக்கு விட்டுவிட்டு அதன் பின் அந்த நீரை உபயோகப்படுத்திக்கொள் ளலாம்.

அதேநேரத்தில் கிணறு இடிந்திருந்தாலோ, கிணற்றில் தண்ணீர் வற்றிப் போயிருந்தாலோ, கிணறு சரிந்திருந்தாலோ கிணற்றுநீரில் துர்நாற்றம் எடுத்தாலோ அந்தக் கிணற்றை மூடிவிடலாம். மூடும் முன் பூமிதேவியை பூஜித்து அதன்பின் மூடவேண்டும்.

மரங்கள் கூட வீட்டினுள் வளரக்கூடாத இடத்தில் வளர்ந்தால், கூடுமானவரை வெட்டுவதை தவிர்ப்பது நல்லது. குறிப்பாக தெய்வீக விருட்சமான வேம்பு, வில்வம் போன்றவற்றை கட்டாயம் வெட்டுவதைத் தவிர்க்க வேண்டும். அப்படி வெட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அதேபோன்று 16 மரங்கள் நட்டுவிட்டு, செவ்வாய், வெள்ளி தவிர்த்து மற்ற தினங்களில் வெட்டலாம். மண்ணில் பூமிதேவியையும், மண்வெட்டியில் ஆதிஷேனாகிய பாம்பையும் முறையாக பூஜித்துவெட்ட வேண்டும். அதேநேரத்தில் வீட்டில் உள்ள மரம் செல் அரித்தாலோ, இடியால் தாக்கப்பட்டாலோ, நெருப்பால் எரிக்கப்பட்டாலோ அதை அகற்றலாம். ஆனால் அதேபோன்ற மரம் நடுவது அவசியமானதாகும்.

வீடுகளில் வாஸ்து அமைப்பில் கோளாறு இருப்பின், எடுத்தவுடன் கட்டடங்களை இடிப்படை விட அதற்கு மாற்றுவழியை சிந்திப்பது நன்மைதரும். வாஸ்து சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட தர்மத்தை சரியாகப் புரிந்து கொண்டு முறையாகக் கடைப்பிடித்தால் அந்த வீடு அமைதி தரும் அதிர்ஷ்ட வீடாக அமையும்.



ஏஏஏ மூவிஸ் இன்ரர்நஷனல் நிறுவனத்தினரால் போரினால் பாதிக்கப்பட்டு மாங்குளம் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களின் தண்ணீர்த் தேவைக்காக இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்களும் சனசமூக நிலையத்திற்கு மிதிவண்டி ஒன்றும் மாணவர்களுக்கு புத்தகப் பைகள் உட்பட கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் ஏஏஏ மூவிஸ் நிறுவனத் தலைவர் க.செவ்வேள் அவற்றை வழங்குவதையும் கலந்துகொண்ட மாணவர்கள் மற்றும் அப்பகுதி மக்களையும் படங்களில் காணலாம்.

## வரவு-செலவுத்திட்டத்தின் பின்னர் வடமாகாண சபை தேர்தலுக்கான வேட்பு மனு கோரப்படவுள்ளது

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் 2011 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் வரவு -செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் வடமாகாணசபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கோரப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

வட மாகாணசபைத் தேர்தல்களை துரித கதியில் நடாத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வரவு -செலவுத் திட்டம் தொடர்பான விவாதங்கள் பூர்த்தியானதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வட மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து அறிவிக்கப்படும் என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.


அடுத்த வருட ஆரம்பத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ளதாகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு சமாந்திரமாக வடமாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மையான வடக்கு மக்கள் ஏற்கனவே மீள் குடியேற்றப்பட்டுள்ள நிலையில் வடமாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதில் சிக்கல் நிலைமை காணப்படாதெனக் குறிப்பிட்டுள்ளார். மாகாணசபை ஒன்றை நிறுவுவதன் மூலம் வடக்கின் அபிவிருத்திப் பணிகளை மேலும் துரிதப்படுத்த முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சியும் வட மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## முஸ்லிம் காங்கிரஸுடனான உறவுகளை முறித்துக்கொள்ளக்கூடாது

### ரணில் தெரிவிப்பு



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடனான உறவுகளை முறித்துக்கொள்ளக் கூடாதென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அண்மையில் நடைபெற்ற 18 ஆவது திருத்தச் சட்ட மூல வாக்கெடுப்பின்போது அரசாங்கத்திற்கு ஆதரவளித்திருந்தது.

எவ்வாறெனினும், முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ஹக்கீமின் அடுத்தகட்ட நகர்வின் அடிப்படை யில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ரணில் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்த போதிலும், ஐக்கிய தேசிய முன்னணியுடனான உடன்படிக்கையை மீறவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரண்டு தேசியப் பட்டியல் வழங்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானத்திற்கு முரணாக வாக்களித்ததென சிரேஷ்ட அரசியல்வாதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ரணில் விக்ரமசிங்க சிறுபான்மைக் கட்சிகளுக்கு அதிக சாதகத் தன்மையுடைய வகையில் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதாக, முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பண்டிதரட்ன தனது ஆய்வில் சுட்டிக்காட்டியிருந்தார். முஸ்லிம் காங்கிரஸை தொடர்ச்சியாக எதிர்க்கட்சியில் தக்க வைத்துக் கொள்வதற்காக ரணில் விக்ரமசிங்க பல்வேறு முயற் சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்



## கும்பம்

(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்)

**சமயோசித புத்தியால் சச்சரவுகளை சமாளிக்கும் ஆற்றல் பெற்ற கும்ப இராசி நேயர்களே!**

மற்றவர்கள் முகம் கோணாதபடி பேச வேண்டும் என்று நினைப்பீர்கள். எதிரிகளை எடைபோட்டுப் பார்க்கும் ஆற்றல் இருந்தாலும், சில சமயங்களில் ஏமாற்றங்களையும் நீங்கள் சந்திக்க நேரிடும். உணர்ச்சி வசப்பட்டு பேசுவதில் உங்களுக்கு இணை யாரும் இல்லை. பேசிய பின் வருத்தப்பட்டு வலியச் சென்று திருப்திப்படுத்துவீர்கள். யார் எந்தக் கேள்வி கேட்டாலும், அதற்கு பதில் சொல்ல கற்று வைத்திருப்பீர்கள்.

புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, செவ்வாய அஷ்டமத்திலிருந்து விலகி விட்டாலும், சனியின் ஆதிக்கம் அஷ்டமத்திலேயே இருப்பதால் எதையும் மற்றவர்களை கலந்தாலோசித்துச் செய்வது நல்லது.

சூரியன் சப்தமாதிபதியாகி அஷ்டமத்தில் உலா வரும் இந்த மாதத்தில் குடும்பத்தில் நிம்மதி குறையலாம். இனம் புரியாத கவலை மேலோங்கும்.

வீம்பு பாராட்டாமல் மற்றவர்களோடு, அனுசரித்து சென்றால் தான் வெற்றிக் கனியை எட்டிப் பிடிக்க முடியும். நாம் உண்டு, நம் வேலையுண்டு என்றும் இருக்காது மற்றவர்களின் விடயத்திலும் தலையிடவும் வேண்டாம். உலகத்தோடு ஒத்துப்போக கற்றுக் கொண்டால், கலகத்திலிருந்து விடுபட்டு கனிவான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

மாதத்தொடக்கத்தில் தனாதிபதி குரு வக்ரம் பெறுகிறார். எனவே, பொருளாதாரம் போதுமான அளவு கைகொடுக்குமா? என்பது சந்தேகம் தான். குருவின் பார்வை சூரிய சனியின் மீது பதிவதால் மலை போல் வந்த துயர் பனிபோல் விலக குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது. தென் முக கடவுள் வழிபாடு உங்களுக்கு நன்மைகளை வழங்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

எதிர்வரும் 26 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறப்போகிறார். பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் அஷ்டமத்தில் உச்சம் பெறும் பொழுது பிள்ளைகள் வழியில் பெரும் செலவு உருவாகலாம். மருத்துவச் செலவுகள் தவிர்க்க முடியாததாக அமையும். பூர்வீக சொத்துகளில் ஒருசிலவற்றை விற்கும் எண்ணம் மேலோங்கும். நண்பர்களுக்கு உதவி செய்த வகையில் கடன்பட நேரிடலாம். விழிப்புணர்ச்சியோடு செயல்பட வேண்டிய நேரமிது.

**புத – சுக்ர யோகம்!**

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி துலாம் இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். அங்குள்ள சுக்ரனோடு அது இணையும் பொழுது தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொல்லை தந்த எதிரிகளின் பலம் குறையும். பெற்றோர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உருவாகும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் ஆதாயம் கிடைக்கும்.

இம்மாதம் இனிய மாதமாக அமைய, அனுமனுக்கு இராம ஜெய மாலை சூட்டி மகிழுங்கள். ஆற்றல் தரும் பராசக்தியை செவ்வாய்தோறும் வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் நிதிப் பற்றாக்குறை ஏற்படலாம். பழைய கடனை அடைக்க, புதிய கடனை வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு அமையும். கணவன், மனைவிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மாறும். தாய்வழி ஒத்துழைப்பும் கிடைக்கும். மாதத்தின் மையப் பகுதியில் வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். குல தெய்வ வழிபாடும், கொடுக்கும் ஆற்றலைப் பெற்ற சனீஸ்வர வழிபாடும் வளமான வாழ்விற்கு வழிகாட்டும். பணிபுரியும் இடங்களில் விழிப்புணர்ச்சியோடு இருந்தால் விவாதங்களில் இருந்து தப்பிக்கலாம்.



## மீனம்

(பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

**எந்தச் சூழ்நிலையிலும் குணம் மாறாமல், விருந்தினர்களை உபசரிக்கும் மீன இராசி நேயர்களே!**

நீங்கள் நட்புக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். நாடெங்கிலும் நண்பர்களைப் பெற்று வைத்திருப்பீர்கள். ஆடம்பரத்தை அதிகம் விரும்பாவிட்டாலும், அப்போதைக்கு அப்போது தன்னை அழகுபடுத்திக் கொள்வதற்கு தயங்கமாட்டீர்கள். பேரும், புகழும் தான் முக்கியம் என்று கருதுவீர்கள். பெரியவர்கள் சொல்லை மதிப்பவர்கள்.

புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஜென்ம இராசியிலேயே குரு வக்ரம் பெறுகிறார். எனவே, உடல் ஆரோக்கியத்திலும் அக்கறை காட்டவேண்டிய சூழ்நிலை உருவாகும். உடனிருப்பவர்களிடமும் கவனத்தோடு நடந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். நிழலாகப் பின் தொடர்ந்து வந்தவர்கள் எதிரிகளாக மாறலாம்.

நேர்பார்வையாக சூரியனும், சனியும் உங்கள் இராசியைப் பார்ப்பதால், ஆரோக்கிய பாதிப்புகள் ஏற்பட்டு அதற்கான செலவுகள் அதிகரிக்கலாம். திட்டமிட்டபடி காரியங்களைச் செய்ய இயலாது. திடீரென இடமாற்றம், ஊர் மாற்றங்கள் ஒருசிலருக்கு ஏற்படலாம். வரும் மாற்றங்களை உபயோகப்படுத்திக் கொள்வதிலும் கூட பிரச்சினைகள் உருவாகலாம்.

எனவே, குரு ப்ரீதியும், வைரவர் வழிபாடும் உங்கள் மனக்கவலைக்கு மருந்தாக அமையும். மந்தன் பார்வை இராசியில் பதியும் பொழுது, எந்த முயற்சியும் ஒருமுறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகலாம். முடிவில் நன்மை ஏற்படும் என்றாலும், முடியும் வரை மனக்கவலை அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள், உடன் பணிபுரிபவர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. வீண் பேச்சுக்களால் விபரீதங்கள் உருவாகலாம்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

எதிர்வரும் 26 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறுகிறார். இதன் விளைவாக, குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும், கொடுக்கல் – வாங்கல்கள் ஒழுங்காகும். பழைய கடன்களை அடைக்க புதிய கடன்களை வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகும். பெற்றோர் வழியில் சுபச் செலவுகள் ஏற்படலாம்.

**புத – சுக்ர சேர்க்கை!**

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி துலாம் இராசியில் புதனும், சுக்ரனும் இணைகிறார்கள். இதன் விளைவாக, சகோதர ஒற்றுமை பலப்படும். அதே நேரத்தில் அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதால், நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்படலாம். தவிர்க்க முடியாத காரணங்களால் சில சொத்துக்களையோ, விலை உயர்ந்த பொருட்களையோ விற்க நேரிடலாம். இக்காலத்தில் குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

இம்மாதம் இனிய மாதமாக அமைய திசை மாறிய தென்முகக் கடவுளை வழிபட்டு வருவது நல்லது. குரு கவசம்பாடி குருவை வழிபட்டால், அதன் திருவருளால் தித்திக்கும் விதத்தில் வாழ்க்கைப் பாதை அமையும்.

### சிவல்புரி சிங்காரம்

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய மாதமாகும். ஆரோக்கியத்திற்காக செலவிடும் சூழ்நிலையுண்டு. குடும்ப உறுப்பினர்களின் குறைகளைக் கூறாமல், பெருந்தன்மையாக நடந்து கொள்வது நல்லது. பெண் குழந்தைகளின் சடங்கு நிகழ்ச்சிகள் எதிர்பார்த்தபடி அமையும். கணவன்-மனைவிக்குள் கனிவு குறையாதிருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளை கண்காணித்து பழக்கவழக்கங்களை நெறிப் படுத்துவது அவசியமாகும். குலதெய்வ வழிபாடும், குரு வழிபாடும் குழப்பங்களை தீர்க்கும். வரவிற்கு மீறிய செலவு ஏற்படலாம். மாதக்கடைசியில் அஞ்சல் வழி அனுகூலமுண்டு. (முற்றும்)

---

## கடவுச்சீட்டில் புகைப்படத்தை மாற்றி

## வெளிநாடு சென்ற பெண்ணுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் பெயரில் சார்ஜாவுக்குச் சென்று அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டு குடிவரவு , குடியகல்வு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்ட தமிழ் பெண்ணொருவருக்கு நீர்கொழும்பு பிரதான நீதவான் 10 வருட காலம் ஒத்திவைத்த இரு வருட கடுழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

அத்துடன் 50 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்தார். கொழும்பு 2 ஐச் சேர்ந்த பெண் ஒருவருக்கே மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெண்ணொருவரின் கடவுச் சீட்டில் தனது புகைப்படத்தை மோசடியான முறையில் உட்புகுத்தி பிரதிவாதி வெளிநாடு சென்றுள்ளார். (ஸ்ரீ-2)



பரியோவான் கல்லூரி முன்பள்ளிச் சிறார்களின் கலைநிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றது. இதில் மாணவர்களின் பாடல் நிகழ்வை படத்தில் காணலாம். (படம்:-கொழும்புத்துறை நிருபர்)

## இவ்வருட இறுதிக்குள் கொழும்பு மாநகரசபை அதிகார சபையாக மாற்றப்படக்கூடிய சாத்தியம்

இவ்வருட இறுதிக்குள் கொழும்பு மாநகர சபை அதிகார சபையாக மாற்றப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

வோஷிங்டன் டி. சீ மற்றும் மதுரை கார்பரேசன் போன்ற அதிகார சபைகளுக்கு நிகரான ஓர் அதிகார சபையை உருவாக்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை மாநகரசபையை அதிகார சபையாக மாற்றும் முனைப்புக்கள் குறித்து ஜே.வி.பி மற்றும் ஐ.தே.க ஆகிய கட்சிகள் உன்னிப்பாக அவதானித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்கு தேர்தலை நடத்தாது நிர்வாகத்தை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இதேவேளை மாநகர சபையாக மாற்றுவதற்கான முனைப்புக்களுக்கு வீதியில் இறங்கி எதிர்ப்பை வெளியிடவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் எம்.ஜே.எம்.முஸாம்மில் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையை வெற்றி கொள்ள முடியாது என்ற காரணத்தினால் தேர்தல்களை நடத்தாது அதனை ஓர் அதிகார சபையாக மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## திருகோணமலையில் மின்னல் தாக்கி மாணவர் ஒருவர் பலி

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் நேற்று முன்தினம் மின்னல் தாக்கியதில் 17 வயது முஸ்லிம் மாணவர் ஒருவர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த போதே அவரை மின்னல் தாக்கியதாக தெரிவிக்கப் படுகிறது.

குறித்த மாணவன் கடந்த வாரம் இடம் பெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட போட்டியில் கலந்து கொண்டு இரண்டாம் இடம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மாணவனின் சடலம் திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## அம்புலிபுரம் கிணற்றிலிருந்து மனித எலும்புகள் கண்டுபிடிப்பு

உப்புவெளி , அம்புலிபுரம் பகுதியிலுள்ள கிணறொன்றிலிருந்து மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை உப்புவெளி பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களுக்கு அமையவே இந்த எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் குறித்த எலும்புக்கூடுகள் தொடர்பான விசாரணைகள் அநுராதபுரம் மருத்துவ பீடத்துக்கு ஒப்படைக்கப்பட்டதாக கூறிய பொலிஸ் பேச்சாளர் குறித்த கிணறு காணப்பட்ட பகுதிக்கு அருகில் மயான மொன்று காணப்படுவதாகவும் கூறினார். (ஸ்ரீ-2)

# ஈழத்தவர் வரலாறு

42

## 7.வன்னிச் சிற்றரசுகள்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

வன்னியர்களின் இரண்டாவது குடியேற்றம் செயதுங்க வரராசசிங்கன் என்ற மன்னனின் காலத்தில் நிகழ்ந்துள்ளது. யாழ்ப்பாண இராட்சியத்தின் (நாகதீவு) முதன் மன்னான உக்கிரசிங்கனின் மகன் இவனாவான். உக்கிரசிங்கன் கதிரமலை (கந்தரோடை) யிலிருந்து தலைநகரை பெருநிலத்திலமைத் திருந்த சிங்கை நகருக்கு மாற்றியுள்ளான். இது குறித்து ஏற்கனவே விரிவாக முன்னைய அத்தியாயங்களில் ஆராய்ந்துள்ளோம்.

அவ்வேளை சிங்கைநகரிலும் அதனைச் சூழ்ந்து பரந்திருந்த வன்னிப் பெருநிலத்திலும் மக்கள் மிகக் குறைந்த அளவிலும் மிகவரிதாகவும் இருந்துள்ளனர் என ஊகிக்கலாம். நாட்டுக்கும் அரசுக்குமுரிய மக்கட் தொகை இருக்கவில்லையாதலால், செயதுங்க வரராசசேகரன் வேறிடங்களிலிருந்து வன்னிப் பிரதேசத்தில் குடியேற்றங்களை ஏற்படுத்த எண்ணினான்.



கந்தரோடை

இம் மன்னனின் காலத்து வன்னிக்குடியேற்றங்களை வையாபாடல் மேல்வருமாறு விபரிக்கின்றது.

செயதுங்க வரராசசிங்கன் தன் மாமனது மகளைத் தான் மணம் முடிக்க விரும்புவதாக மன்னனிடம் அறிவிக்குமாறு தூதுவரை அனுப்பினான். தூதுவர்கள் சொன்னவற்றைக் கேட்ட மதுரை மன்னர் 60 வாட்படை வன்னியரை அழைத்துத் தன் மகள் சமதூதியை இலங்கைக்கு அனுப்பிவைத்தான். செயதுங்கவராசசிங்கன் இளவரசியை மணம் முடித்துவிட்டு அவளோடு வந்த வன்னியர்களை அடங்காப்பற்றினைச் சென்று ஆளுமாறும் ஆண்டுதோறும் தனக்குத் திறை செலுத்துமாறும் பணித்தான்.

அடங்கப்பற்றை அடைந்ததும் வன்னியர் அதைக் கைப்பற்றுவதற்குத் தம்மிடம் போதிய படையில்லை என்பதை உணர்ந்தார்கள். எனவே இளஞ்சிங்கமாப்பாணன், நல்லவாகுதேவன், அத்திமாப்பணன் என்போரிடம் தூதுவர்களை அனுப்பி மதுரை, மருங்கூர், காரைக் கால்,காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, துளுவைநாடு, தொண்டை மண்டலம், வட கிரிநாடு எனுமிடங்களிலிருந்து கூட்டி வரக் கூடியவர்கள் அனைவரையும் கொண்டு வருமாறு சொல்லியனுப்பினார்கள். இதனை அறிந்ததும் தில்லை மூவாயிரவர்.

திடவீரசிங்கன்,குடை காத்தான், முடிகாத்தான், நல்லவாகு,மலைநாடான், சிங்கவாகு, சோதயன், அங்கசிங்கன், கட்டைக்காலிங்கன், சொக்கநாதன், கங்கைமகன், கலைக்கோட்டு முடியோன், வீரகச்சமணி, முடியரசன், கபாலிவீரன், சேதுபதி, இளஞ்சிங்க மாப்பாணன் என்போரும் பெருமைமிக்க ஆரிய வம்சத்தாரும் யாழ்ப்பாணம் வந்தார்கள்.

இவர்களிலே திடவிரசிங்கன் கரிக்கட்டு மூலைப்பற்றுக்கு அதிபதியானான். இளஞ்சிங்க மாப்பணன், இராசசிங்க மாப்பாணன், நல்லவாகு மெய்த்தேவன், கருத்தவாகு, சிங்கமாப்பாணன் என்போர் சான்றோரையும் வலையரையும் துரத்திவிட்டு முள்ளியவளையைக் கைப்பற்றினார்கள். நீலையினார் திசையாண்டாரும்படையும் மேல்பற்றுக்கு வந்த சகரன்,மகரன் என்ற வேட்டுவத் தலைவாக்ளைக் கொன்றுவிட்டு நாட்டை ஆண்டனர். மேற்குமூலை, கிழக்குமூலை என்பனவற்றைக் கைப்பற்றிய சிங்கவாகு பொக்கா வன்னியிலிருந்தான். சுபதிட்டா என்னும் அந்தணனும் படையும் திரியாய் எனுமிடத்திற்குச் சென்று நீலப்பணிக்கனைக் கொன்றுவிட்டு அந் நிலத்தை ஆண்டனர். காலிங்கன், மலையகத்தார், கன்னார் முதலியோர் கச்சாயில் குடியிருந்தார்கள். அங்சன் கட்டுக்குளத்திற்குச் சென்று வாழ்ந்தான். புகழ்மிக்க சிங்கவாகு திருகோணமலைக்குச் சென்றான்.மைடன் என்போன் கொட்டியாரத்திற்கு அதிபதியானான். ஒடுக்கன்,நீலன், மைலன் என்போர் முறையே துணுக்காய், இத்திமடு,நெடுங்கேணி எனுமிடங்களுக்குச் சென்றனர்.

ஆற்றில் பொருந்திய சன்மன் நொச்சி முனையில் ஆண்டான்.நாகன் புல்வெளிக்குச் செல்ல நிலையினான் வாகுதேவன் தனிக்கல்லிலிருந்தான். வன்னியர்கள் வந்த பின்னர் அடுத்து அவர்களின் மனைவிமாரும் பரிவாரங்களும் அடங்காப்பற்றை வந்தடைந்தனர்.இவ்வாறு வந்தவர்களுள் மழுவீர மழவராயனும், நாட்டையாண்ட மழவராயனும் மன்னனோடு இருந்தார்கள். பூபால வன்னிமையும் கோபாலரும் கட்டக்குளத்திலும் திரியாயிலும் இனிது வாழ்ந்தனர். வல்லவராயன் நல்லூரிலிருந்தான் (பூநகரி நல்லூர்) குடைகாத்தான் , கொடித்தேவன்,தேவராயன்,கந்தவனத்தான் என்போர் செட்டிக்குளத்தின் அதிபதிகளாயினர். உத்துங்கராயன் பனங்காமத்தில் வாழ்ந்தான்.

வன்னிக் குடியேற்றங்கள் படையெடுப்புக்களின் விளைவாக ஏற்பட்ட ஒன்றாகவே தோன்றும். ஐம்பத்தொன்பது வன்னியரும் பாண்டி நாட்டில் வந்தனர் என்று சொல்லப்படுவதால் பாண்டியப் படையெடுப்புக்களின் விளைவுகளுள் ஒன்றே வையாபாடல் கூறும் வன்னிக் குடியேற்றம் எனக் கொள்வது சாலப்பொருத்தம். (தொடரும்)

## ரணிலின் பிரத்தியேக செயலாளரிடம் பொலிஸார் இரண்டரைமணிநேரம் விசாரணை

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவின் பிரத்தியேக செயலாளர் சுதத் சந்திரசேகரவிடம் மிரிஹான பொலிஸார் நேற்றுமுன்தினம் சுமார் இரண்டரை மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளனர்.

ஜனாதிபதிக்கு எதிராக சேறுபூசும் சுவரொட்டியொன்றை அச்சிட்டமை தொடர்பாகவே இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் புகைப்படத்தை வேறு விதமாக மாற்றி சுவரொட்டியொன்றை அச்சிட்டீர்களா என பொலிஸார் தன்னிடம் கேட்டதாகவும் தான் அவ்வாறான சுவரொட்டியை அச்சிட்டு வழங்கவில்லை எனவும் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இந்தச் சுவரொட்டி அச்சிட்ட சம்பவத்துடன் மங்கள சமரவீர சம்பந்தப்பட்டுள்ளதாக தான் கூறியதாகவும் சந்திரசேகர கூறியுள்ளார்.

இதேவேளை சந்திரசேகரவிடம் நடத்தப்பட்ட விசாரணை தொடர்பான அறிக்கையை மிரிஹான பொலிஸார் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கையளிக்கவுள்ளதாகவும் இதன்பின்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மங்கள சமரவீரவிடம் வாக்குமூலமொன்றைப் பெற்றுக்கொள்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

## சரியான பாதையில் பயணித்தவர்களது வரலாறு எம்மை அடையாளப்படுத்தியுள்ளது

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(கொழும்பு)

சரியான பாதையில் பயணித்தவர்களின் வரலாறு எம்மை அடையாளப்படுத்தியிருக்கிறது என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அபிவிருத்தி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,எமது மக்களை சரியான பாதையில் அழைத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் கைகளிலேயே தங்கியுள்ளது.

கடந்த காலங்களில் மக்களுக்கான சேவைகளை முழுமையாக ஆற்ற முடியாத அவல நிலை இருந்து வந்துள்ளதை யாரும் எளிதில் மறக்க முடியாது. ஆனாலும் அந்தச் சூழலில் நாம் மக்களுக்கான தேவைகளையும் கோரிக்கைகளையும் நிறைவேற்றியிருக்கிறோம்.

கடந்த காலங்களிலும் சரி நிகழ்காலத்திலும் சரி சரியான பாதையில் பயணித்தவர் என்று வரலாறு எம்மை அடையாளப்படுத்தியிருக்கிறது.

எனவே இன்றைய இயல்பான சூழலில் எல்லோரும் மக்களுக்காக சேவைகளைச் செய்வதுடன் தேவைகளையும் நிறைவேற்ற திடசங்கற்பம் பூணவேண்டுமென்பதுடன் அபிவிருத்தித் திட்டங்களை ஆலோசனைக் குழுக்கள் மூலமாக முன்னெடுப்பது முக்கியமானதாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலெண்ரின், ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்தின் எனப்பலர் உடனிருந்தனர். (ஸ்ரீ-2)



யாழ்.மாவட்ட சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களுக்கான நியமனம் வழங்கல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்.மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றது.இதில் போக்குவரத்து பிரதி அமைச்சர் றோகண திஸாநாயக்க, யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் கலாநிதி வி.தங்கராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ்.மாவட்ட அமைப்பாளர்களுள் ஒருவராக நியமிக்கப்பட்ட அன்ரன் தங்கதுஷாராவிற்கு நியமனக் கடிதத்தை பிரதி அமைச்சர் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

# அமெரிக்காவின் எச்சரிக்கை அறிக்கை தொடர்பில் எதுவும் தெரியாது

## ஊடக அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



(கொழும்பு)

லக்ஷர்- இ-தொய்பா அமைப்பு தொடர்பில் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படும் கருத்துகள் குறித்து தமக்கு எதுவும் தெரியாது என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

லக்ஷர்- இ-தொய்பா அமைப்பைச் சேர்ந்த 200 போராளிகள் இந்தியாவுக்குள் ஊடுருவும் நோக்கில் , இலங்கையில் நிலைகொண்டிருப்பதாக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. அமெரிக்காவின் இந்தப் புலனாய்வு அறிக்கை இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளினது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லக்ஷர்- இ-தொய்பா தொடர்பான அமெரிக்காவின் புலனாய்வு அறிக்கை இலங்கைக்கும் இந்தியாவிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக எம்.எஸ்.என். என்ற இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை லக்ஷர்- இ-தொய்பா அமைப்பு தொடர்பான செய்திகளுக்கு ஏற்கனவே விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்த விடயம் குறித்து விளக்கமளித்துள்ளார். இலங்கையில் லக்ஷர்- இ-தொய்பா அமைப்பிற்கு பயிற்சிகள் வழங்கப்படவில்லை என பாதுகாப்புச் செயலாளர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்கென தனியான அரசியல் தீர்வு தொடர்பில் பேச வேண்டியதில்லை

## ஜாதிக ஹெலஉறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு , கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்கு என தனியான அரசியல் தீர்வு தொடர்பில் தற்போது பேசிக்கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லை என்றே ஜாதிக ஹெல உறுமய கருதுகின்றது. ஆனால் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் விரைவாக தீர்க்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம் என்று ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளரும் தேசிய அமைப்பாளருமான நிஷாந்த ஸ்ரீ வர்ண சிங்க தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வு விடயங்கள் தொடர்பில் ஹெல உறுமய எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பது தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜாதிக ஹெல உறுமயவின் ஊடக பேச்சாளர் இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

வடக்கு , கிழக்கு மாகாணங்களின் மக்களுக்கு என தனியான அரசியல் தீர்வுவிடயம் தொடர்பில் தற்போது பேச வேண்டிய அவசியமில்லை. ஆனால் அப்பகுதியில் விரைவாக மறு சீரமைப்பு பணிகள் செய்யப்பட வேண்டும்.


தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும். வடக்கு , கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி செயற்பாடுகளை விரைவுபடுத்த வேண்டும்.

இவற்றுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமே தவிர தனியான அரசியல் தீர்வு குறித்து பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை.

மேலும் வடக்கு மாகாணத்தில் மாகாண சபையை விரைவாக இயங்க வைக்க வேண்டும். ஏனைய மாகாணங்கள் அனுபவிக்கும் உரிமையை வடக்கு மாகாணமும் அனுபவிக்க வேண்டும்.

ஆனால் மாகாண சபை முறைமையில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து சிக்கல்கள் உள்ளன. எனினும் காணி அதிகாரங்கள் கணிசமான அளவு தற்போதைக்கும் மாகாண சபைகளுக்கு உள்ளன.

எனினும் பொலிஸ் அதிகாரம் என்பது யதார்த்தமான விடயமல்ல. எனவே மூன்றாம் கட்ட அரசியலமைப்பு திருத்தங்களின் போது மாகாண சபை முறைமையின் பொலிஸ் அதிகாரங்களில் திருத்தங்கள் கொண்டு வரப்படும் என்று ஜாதிக ஹெல உறுமய நம்புகின்றது. (ஸ்ரீ-2)



யா/ ஞானசாரியார் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த சாரணர் திரளணியில் யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சாரணர் அணியைச் சேர்ந்த சாரணன் குணசேகரம் யுகந்தனுக்கு பருத்தித்துறை மாவட்ட சாரண ஆணையாளர் இ.ரவீந்திரன் ஜனாதிபதி விருது வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# 21.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



### நிகழ்வுகள்

- 1792 - பிரான்சில் முடியாட்சி அகற்றப்பட்டு குடியரசு நிறுவப்பட்டது.
- 1860 - இரண்டாம் ஓப்பியம் போர்: ஆங்கிலேய, பிரெஞ்சுப் படைகள் சீனப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1896 -பிரித்தானியப் படைகள் சூடானின் டொங்கோலா நகரைக் கைப்பற்றினர்.
- 1921 - ஜெர்மனியில் தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற பெரும் வெடிவிபத்தில் சிக்கி ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.
- 1934 - ஜப்பானில் மேற்கு ஹொன்சூ என்ற இடத்தில் இடம்பெற்ற சூறாவளி காரணமாக 3 ஆயிரத்து 36 பேர் கொல்லப்பட்டனர்.
- 1938 - நியூயோர்க்கின் லோங் தீவில் சூறாவளி காரணமாக 500 முதல் 700 வரையானோர் கொல்லப்பட்டனர்.
- 1939 - ருமேனியாவின் பிரதமர் ஆர்மண்ட் கலினெஸ்கு தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1942 - மேற்கு உக்ரைனில் 2ஆயிரத்து500 யூதர்கள் நாசிகளினால் கொல்லப்பட்டனர்.
- 1964 - மோல்டா, ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1972 - பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பேர்டினண்ட் மார்க்கொஸ் முழு நாட்டிலும் இராணுவ ஆட்சியைப் பிறப்பித்தார்.
- 1981 - பெலீஸ், ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1991 - ஆர்மேனியா, சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1995 - விநாயகரின் சிலைகள் பால் குடிக்கும் அதிசயம் உலகின் பல இடங்களில் இடம்பெற்றது.
- 1999 - தாய்வானில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 2ஆயிரத்து400 பேர் கொல்லப்பட்டனர்.
- 2001 - நாசாவின் டீப் ஸ்பேஸ் 1 விண்கலம் பொரெல்லி வால்வெள்ளிக்குக் அண்மையில் 2ஆயிரத்து200 கிமீ தூரத்திற்குள் சென்றது.
- 2003 - கலிலியோ விண்கலத் திட்டம் இடைநிறுத்தப்பட்டு அது ஜூபிட்டர் கோளின் வளிமண்டலத்தினுள் அனுப்பப்பட்டு அதனுடன் மோதவிடப்பட்டது.
- 2004 - பூர்ஜ் டுபாய் கட்டட அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1866 - எச்.ஜி.வெல்ஸ், ஆங்கில எழுத்தாளர், (இ. 1946)
- 1909 - குவாமே நிக்ரூமா, கானா பிரதமர் (இ. 1972)
- 1954 - சின்சோ அபே, ஜப்பானிய அரசியல்வாதி
- 1957 - கெவின் ரட், அவுஸ்திரேலியாவின் 26வது பிரதமர்
- 1963 - கேட்லி அம்ப்ரோஸ், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் பந்து வீச்சாளர்.

### இறப்புகள்


- 1971 - பெர்னார்டோ ஹூசே, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1887)
- 2007 - விஜயன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்
- 2008 - டி.பி.விஜயதுங்கா, இலங்கையின் 4ஆவது ஜனாதிபதி (பி. 1922)

**1989 - இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளர் ராஜினி திரணகம யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.**



# சட்டத்துக்கு புறம்பான வழிகளில் ஆட்சியை கவிழ்ப்பதற்கான முயற்சி வெற்றி அடையாது

## பாகிஸ்தான் பிரதமர் எச்சரிக்கை



(லாகூர்)

பாகிஸ்தானில் எங்கள் ஆட்சியை கவிழ்ப்பதற்கு சட்டத்துக்கு புறம்பான வழிகளில் முயற்சி செய்யலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். அவர்கள் முயற்சி வெற்றி அடையாது. அதனால் நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்று அந்த நாட்டு பிரதமர் கிலானி எச்சரித்துள்ளார்.

பாகிஸ்தானில் சமீபத்தில் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளத்தால் இலட்சக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு நிவாரண பணிகளை மேற்கொள்வதில் அரசாங்கம் திருப்திகரமாக நடந்து கொள்ளவில்லை.

இதனால் அரசாங்கம் மீது மக்கள் கோபத்தில் உள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அரசாங்கத்தை கவிழ்த்து விட வேண்டும் என்று தீவரவாதிகள் நினைக்கிறார்கள். எதிர்க்கட்சிகளும் இந்த திட்டத்தில் இருக்கின்றன.

இதனால் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஆட்சி கவிழப்போகிறது என்றும் 2013 ஆம் ஆண்டுக்கு முன்பாகவே தேர்தல் வந்து விடும் என்றும் வதந்திகள் உலா வருகின்றன.

இந்த நிலையில் பிரதமர் கிலானி இந்த வதந்திக்கு எதிராக கடுமையான தொனியில் பேசி இருக்கிறார். அவர் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ,

எங்களின் எதிரிகள் சட்டத்துக்கு புறம்பான வழிகள் மூலமாக எங்கள் ஆட்சியை கவிழ்க்க முயற்சி செய்யலாம் என்று யோசிக்கிறார்கள் .

அவர்கள் திட்டம் வெற்றி பெறாது. அதனால் உங்கள் நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்று நான் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் ஆட்சி முழு 5 ஆண்டு காலமும் பதவியில் நீடிக்கும். ஆயுள் காலம் முடிவதற்கு முன்னதாக அது மாறிவிடாது. நான் பிரதமர் பதவியில் நீடிக்கிறேனா இல்லையா என்பதில் எனக்கு ஆர்வமில்லை. ஆனால் எங்கள் கட்சி ஆட்சி நீடிக்கும்.

எங்கள் கட்சி ஆட்சியை நீக்குவதற்கு யாராவது சதித்திட்டம் தீட்டினால் அவர் நாட்டைத் துண்டாடுவதற்கு செய்யும் சதி ஆகும்.


நாட்டைத் தீவிரவாதம், பொருளாதாரப் பின்னடைவு போன்ற பிரச்சினைகள் சூழ்ந்து கொண்டிருக்கும் போது அதைச் சமாளிப்பதற்கு ஒற்றுமையுடன் பாடுபட தோள் கொடுக்க எதிர்க்கட்சிகள் முன்வரவேண்டும்.

என் ஆட்சி இவ்வளவு நாள் தான் நீடிக்கும் என்றும் இன்ன திகதியில் கவிழ்ந்து விடும் என்றும் நாள் குறிப்பதை எதிர்ப்பாளர்கள் கைவிட வேண்டும்.

என் ஆட்சியில் தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு தான் நான் முன்னுரிமை கொடுத்திருக்கிறேன். தீவிரவாதத்தை ஒழித்து விட்டால் சட்டம்-ஒழுங்கு நிலைமை மேம்பட்டு விடும். அதன் பின்னர் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். இவ்வாறு கிலானி கூறினார்.

(ஸ்ரீ-2)

## சாதனைக்கு ஊனம் தடையல்ல;



பிரான்ஸ் நாட்டிலுள்ள விஸ்சன்ட் நகரைச் சேர்ந்தவர் பிலிப் குரோய்ஷன் வயது (42) ஆகும். கடந்த 1994 ஆம் ஆண்டு நடந்த மின்தாக்குதலில் இவர் தனது 2 கைகள் மற்றும் 2 கால்களை இழந்துவிட்டார்.

இருந்தும் வாழ்க்கையில் ஏதேனும் சாதனை படைக்க வேண்டும் என நினைத்தார். பொதுவாக அவருக்கு நீச்சல் மிகவும் பிடிக்கும். எனவே, தனது சாதனைக்கு நீச்சலைத் தேர்ந்தெடுத்தார்.

இதற்கமைய இங்கிலாந்து அருகேயுள்ள ஆங்கில கால்வாயை நீந்திக் கடக்க முடிவு செய்தார். அதற்கான பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். இந்த நிலையில் கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை அதற்கான நடவடிக் கையில் இறங்கினார்.

அவர் 13 மணி நேரத்தில் ஆங்கில கால்வாயை நீந்திக் கடந்து சாதனை படைத்தார். 24 மணி நேரத்தில் கடக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் அவர் 10 மணி நேரத்துக்கு முன்பே நீந்தி முடித்தார்.

ஆங்கிலக் கால்வாயை அவர் நீள் வட்ட வாக்கில் 21 மைல் நீளம் நீந்தி கடந்துள்ளதால் தனது சாதனைக்கு ஊனம் ஒரு தடையல்ல என்பதையும் அவர் நிரூபித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அணு விஞ்ஞானியை அமெரிக்காவிடம் ஒப்படைக்க விரும்பினார் முஷாரப்

## பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் குற்றச்சாட்டு

பாகிஸ்தான் அணு விஞ்ஞானி அப்துல் காதிர்கானை அமெரிக்காவிடம் ஒப்படைக்க முன்னாள் ஜனாதிபதி முஷரப் விரும்பினார் என்று முன்னாள் பிரதமர் ஜபார் உல்லா கான் ஜமாலி குற்றஞ் சாட்டினார்.

அவர் ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

தன் விருப்பத்தை முஷரப் என்னிடம் தெரிவித்த போது இது பற்றி முடிவெடுப்பதற்காக நான் மந்திரி சபையைக் கூட்டி ஆலோசனை நடத்தினேன். அதன் பின்னர் இந்த முடிவுக்குச் சம்மதிக்க முடியாது என்றும் நீங்கள் ஜனாதிபதியாக இருக்கலாம். ஆனால் அரசாங்கம் அப்துல்காதிர்கானை அமெரிக்காவிடம் ஒப்படைக்காது என்று தெரிவித்தேன். இவ்வாறு ஜமாலி தெரிவித்தார்.

அருகில் இருந்த அணு விஞ்ஞானி காதிர் கான், இதை உண்மை என்று ஏற்றுக் கொண்டார். அதோடு முன்னாள் பிரதமர் நேர்மையானவர் என்றும் மென்மையானவர் என்றும் தெரிவித்தார். (ஸ்ரீ)

# ஹமாஸ் இயக்கத் தளபதி இஸ்ரேலிய இராணுவ வீரர்களால் சுட்டுக்கொலை

(ஜெருசலேம்)


பாலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அமெரிக்காவின் ஏற்பாட்டின் பேரில் இஸ்ரேல், பாலஸ்தீனிய தலைவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி வரும் நிலையில் மேற்குக் கரைப் பகுதிக்கான ஹமாஸ் இயக்கத் தளபதி இஸ்ரேல் இராணுவ வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியான மேற்குக் கரையின் ஹமாஸ் தளபதியாக இருந்தவர் அயத் ஷில்பாயா. அவரைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் மேற்குக் கரையில் அவர் தங்கியிருந்த வீட்டில் சோதனை நடத்தினார்கள். அப்போது நடந்த சண்டையில் அவர் பலியானார்.

கடந்த ஓகஸ்ட் மாத இறுதியில் மேற்குக் கரையில் நடந்த தாக்குதலில் அங்கு குடியேறிய யூத இனத்தைச் சேர்ந்த 4 பேர் பலியானார்கள். அவர்கள் கொல்லப்பட்டதற்கு ஹமாஸ் இராணுவப் பிரிவு பொறுப்பு ஏற்றது. இதைத் தொடர்ந்து இஸ்ரேல் இராணுவத்தினரும் பாலஸ்தீனப் பொலிஸாரும் நூற்றுக் கணக்கான ஹமாஸ் இயக்கத்தினரை கைது செய்தனர்.




இந்த நிலையில் அயத்ஷில்பாயா கொல்லப்பட்டிருக்கிறார். அவர் கொல்லப்பட்டதற்கு பாலஸ்தீனப் பிரதமர் சலாம் பய்யத் கண்டனம் தெரிவித்திருக்கிறார். இந்தக் கொலை வன்முறைகளை மேலும் தீவிரப்படுத்தும் என்று குறிப்பிட்டார். இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தைநடத்துவதற்கு ஹமாஸ் எதிர்ப்புத்தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



ஈரான் ஜனாதிபதி அகமது நிஜாத் ஐ.நா.பொதுச் செயலாளர் பான்கீ-மூனை (வலது) ஐ.நா.தலைமைச் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

# பக்தாத்தில் இரட்டைக்குண்டுவெடிப்பு

## 31 பேர் உயிரிழப்பு; பலர் காயம்



(பக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் நேற்று முன்தினம் நிகழ்த்தப்பட்ட இரட்டைக் கார்க் குண்டு வெடிப்பில் 31 பேர் உயரிழந் தனர். பக்தாத்தின் மேற்குப் பகுதியில் முதல் கார் குண்டு வெடித்ததில் 10 பேர் அதே இடத்தில் உயிரிழந்தனர். அத்துடன் 10 இற்கும் மேற்பட் டோர் படுகாயமடைந்தனர்.

அடுத்த சில நிமிடங்களில் பக்தாத்தின் வடக்குப் பகுதியில மற்றொரு கார் குண்டு வெடித்தது. இதில் 21 பேர் கொல்லப்பட்டதுடன் 70 இற்கும் அதிகமானனோர் காய மடைந்தனர்.

புனித றம்ழான் மாதத்தையொட்டி அமைதியாக இருந்த பக்தாத்தில் மீண்டும் பயங்கர தாக்குதல் நடைபெற்றிருப்பது அந் நாட்டு மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள் ளது. இந்த தாக்குதல் சம்பவங்களுக்கு இது வரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப் பேற்கவில்லை.

ஈராக்கில் பாதுகாப்பு பணியில் ஈடுபட் டிருந்த அமெரிக்க படைகளை வாபஸ் பெற அந்நாட்டு அதிபர் பராக் ஒபாமா அண்மை யில் உத்தரவிட்டார். அதன்படி கடந்த முத லாம் திகதி முதல் தலைநகர் பக்தாத்தின் பாது காப்பு ஈராக் இராணுவம் மற்றும் பொலிசார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து பக்தாத்தில் தீவிர வாதிகளின் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. ஈராக் பாதுகாப்பு படையினரை குறி வைத்து தீவிரவாத அமைப்புகள் மேலும் பல்வேறு தாக்குதல்களை நடத்தத் திட்ட மிட்டுள்ளதாக அமெரிக்க உளவு அமைப் புகள் எச்சரித்துள்ளன. (ஸ்ரீ-2)

# மத்திய பிரதேசத்தில் ரயில் விபத்து; 15 பேர் பலி; 30 பேர் காயம்

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை இடம் பெற்ற புகையிரத விபத்தில் 15 பொது மக்கள் பலியாகியுள்ளதுடன் 30 பேர் காயமடைந்துள்ளனர்.



சிவபுரி மாகாணத்தின் பாதேர்வா புகையிரத நிலையத்தில் தரித்து நின்ற பயணிகள் புகையிரத தத்துடன் சரக்கு புகையிரதம் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மீட்புப் பணியாளர்கள் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஜுலை மாதம் மேற்குவங்காளத்தின் சைந்தியா நகரில் ஏற்பட்ட புகையிரத விபத்தில் சுமார் 60 பயணிகள் பலியானதுடன் 120 பேர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மே மாதம் பயணிகள் புகையிரத தண்டவாளத்தை விலகியோடி சரக்கு புகையிரதத்துடன் மோதி ஏற்பட்ட விபத்தில் 150 பயணிகள் பலியாகியிருந்தனர். (ஸ்ரீ-2)

# நயன்தாராவுடன் திருமணமா? உண்ணாவிரதம் இருப்பேன்

## பிரபுதேவாவுக்கு மனைவி ரமலத் மிரட்டல்

நடிகை நயன்தாராவை விரைவில் திருமணம் செய்து கொள்ளப்போவதாக பிரபுதேவா அண்மையில் அறிவித்திருந்தார்.

பிரபுதேவாவின் இந்த அறிவிப்பு அவரது மனைவி ரம்லத்துக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அடுத்த கட்ட முடிவு பற்றிசட்டத்தரணிகளுடன் ஆலோசித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையில் அவர் மும்பையில் உள்ள பிரபுதேவாவிடம் கையடக்கத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய நயன்தாராவை திருமணம் செய்தால் குழந்தைகளுடன் பொலிஸ் ஐ.ஜி அலுவலகம் எதிரில் உண்ணாவிரதம் இருப்பேன் என்று மிரட்டியதாக தகவல் வெளியாகியுள்ளது.

ரமலத்தைச் சமாதானப்படுத்த படப்பிடிப்பை இடையில் நிறுத்தி விட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி பிரபுதேவா சென்னை திரும்புகிறார்.மனைவியை சமரசப்படுத்தி திருமணத்துக்கு சம்மதம் வாங்கும் முயற்சியில் அப்போது அவர் ஈடுபடுவார் எனத் எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# விஜயவாடா நகரில் டெங்கு காய்ச்சலுக்கு 100 பேர் பலி

ஆந்திராவில் டெங்கு காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது. ஏராளமானோர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள். இதேபோல் மலேரியா காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் தாக்குதலுக்கும் அதிக அளவில் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

விஜயவாடா நகரில் டெங்கு காய்ச்சல் அதிக அளவில் பரவியுள்ளதுடன் அங்கு கடந்த சில வாரங்களில் 100 பேர் வரை பலியாகியுள்ளனர். இதனால் ஏராளமானோர் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

அரச வைத்தியசாலைகள் சுகாதாரமின்றி இருப்பதால் பொதுமக்கள் அங்கு சிகிச்சை பெற தயக்கம் காட்டுகிறார்கள்.

இதனால் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் தனியார் வைத்தியசாலைகளை நாடிச் செல்கின்றனர். இதனால் அங்கு கூட்டம் அதிகமாகவுள்ளது.

இதேபோல் குண்டூர், பிரகாசம், ஆதிலாபாத், ஸ்ரீகாகுளம், வாரங்கல், ஐதராபாத் போன்ற நகரங்களிலும் டெங்குகாய்ச்சலால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# உத்தரகாண்ட் மாநிலத்தில் நிலச்சரிவில் சிக்கி 36 பேர் பலி

## மழைக்கு பலியானோர் 65 ஆக உயர்வு



(டேராடூன்)

உத்தரகாண்ட் மாநிலத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 36 பேர் உயிரோடு புதைந்து பலியானார்கள். இவர்களையும் சேர்த்து கடந்த சில நாட்களில் பெய்த மழைக்கு பலியானோர் எண்ணிக்கை 65 ஆக உயர்ந்துள்ளது.

உத்தரகாண்ட் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக மழை கொட்டி வருகிறது. கடந்த 18ஆம் திகதி பல இடங்களில் திடீரென மேகத் திரள் வெடித்து பலத்த மழை கொட்டியது. டேராடூன், அல்மோரா, நைனிடால், ஹரித்துவார் உட்பட பல மாவட்டங்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டன. ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பல மாவட்டங்களை வெள்ளம் சூழ்ந்தது. மலைப் பகுதியில் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது.

அல்மோரா மாவட்டத்தில் பால்டா பாடி கிராமம், தெவாலி கிராமம் ஆகிய கிராமங்களில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 36 பேர் உயிரோடு புதையுண்டு பலியானார்கள். அவர்களின் வீடுகள் மீது மலைப் பகுதி சரிந்து மூடியதால் இந்த துயர சம்பவம் ஏற்பட்டது. இவர்களில் 20 பேரின் உடல்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது. பிகியாசின், சல்ட், ஜோஷியானா, துவாராகாட், அஸ்குலி, கப்டா உள்ளிட்ட பல கிராமங்களில் ஏற்பட்ட நிலச் சரிவில் சிக்கி 2 குழந்தைகள், 80 வயது மூதாட்டி ஒருவர் உள்பட 10 பேர் பலியானார்கள் 5 பேர் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு பலியானார்கள்.

இவர்களையும் சேர்த்து இந்த மாநிலத்தில் மழைக்கு பலியானோர் எண்ணிக்கை 65 ஆக உயர்ந்துள்ளது.

ஹரித்துவார், டேராடூன் உட்பட பல சுற்றுலா தலங்களுக்கு சென்றுள்ள பக்தர்களும் சுற்றுலா பயணிகளும் நிலச்சரிவால் சிக்கி தவிக்கிறார்கள். அவர்களை மீட்க மாநில நிர்வாகம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

உத்தரகாண்ட் மாநிலத்தை பேரிடர் பாதித்த மாநிலமாக அறிவித்து நிவாரணப் பணிகளுக்கு உடனடியாக 5 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கும்படி முதல் -மந்திரி பொக்காரியால் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# ப.சிதம்பரம் தலைமையில் அனைத்துக்கட்சிக் குழு

மூன்று மாத வன்முறைச் சம்பவங்களுக்கு தீர்வு காணும் நோக்கத்தில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தலைமையிலான அனைத்துக் கட்சிக்குழு நேற்று காஷ்மீர் சென்றது.

காஷ்மீரில் 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்தக் குழுவினர் அம் மாநிலத்தில் உள்ள கட்சிகளின் பிரதிநிதிகள், வர்த்தக அமைப்புகள், சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை சந்தித்து கருத்துக்களை அறிவித்துள்ளனர்.

42 பேர் கொண்ட அனைத்துக் கட்சிக் குழுவில் இடம்பெற்றுள்ள சிலர் ஹுரியத் தலைவர் சையத் அலி ஷா கிலானியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிகிறது. அனைத்துக் கட்சிக் குழுவைச் சந்திக்க கிலானி மறுத்துவிட்டாலும் விருந்தினர்களாக அவரை இக்குழுவினர் சந்திப்பார் எனத் தகவல் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்

# புதுடில்லிக்கு பயங்கரவாத அச்சுறுத்தல்; அவுஸ்திரேலியா எச்சரிக்கை

புதுடில்லிக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் மிகுதியாக இருப்பதாக இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்ளும் தனது நாட்டினருக்கு அவுஸ்தீரேலியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

டில்லியில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் தொடங்கவுள்ள சூழலில் டில்லியிலிலுள்ள ஜும்மா பள்ளிவாசல் அருகே தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் தைவான் நாட்டைச்சேர்ந்த இரண்டு பேர் காயமடைந்தனர்.


இந்நிலையில் அவுஸ்திரேலிய வெளிநாட்டு விவகாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தீவிரவாதிகள் வெளிநாட்டு பயணிகளை குறிவைத்துத் தாக்கும் வாய்ப்பு அதிகமாக இருப்பதால் இந்தியப் பயணம் மேற்கொள்ளும் அவுஸ்திரேலிய நாட்டினர் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

டில்லியில் பொதுநலவாய போட்டிகளில் தாக்குதல் நடத்தப்பட 80 சதவீத வாய்ப்புள்ளதாக அவுஸ்திரேலிய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-2)



விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சென்னையில் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகளை இராட்சத பாரந்தூக்கியைக் கொண்டு தூக்கி கட்டுமரத்தில் கொண்டு சென்று கடலில் கரைத்தனர்.






"சிசு உதான" (மாணவ மலர்ச்சி) வங்கித் திறப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை யா/புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலையில் பாடசாலை அதிபர் எஸ்.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் பிரதம விருந்தினர் மாணவி ஒருவரிடமிருந்து வைப்பினை ஏற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

# பண்பாட்டையும் இருப்பையும் பாதுகாக்க சுவடிகளை பாதுகாக்க வேண்டும்

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவிப்பு



பண்பாட்டின் அறிவுச் செல்வங்களை காக்கவும் மீட்கவும் ஓலைச்சுவடிகளை மின்னியல் பதிவுகளாக்கி பாதுகாக்க வேண்டும். அதன் வாயிலாக எமது இருப்பை பாதுகாக்க முடியும் என்று யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மண்டபத்தில் நுண் கலைத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட ஓலைச்சுவடிகளை பேணுதல் தொடர்பான பயிலரங்கை ஆரம்பித்து வைத்து சிறப்புரையாற்றும்போதே துணைவேந்தர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு கருத்துரைக்கையில், அறியாமையினாலோ அல்லது நவீன வாழ் வின் அவசரங்களாலோ பல பண்பாட்டு எச்சங்கள் என்கிற பொக்கிசங்களை நாம் இழந்திருக்கிறோம். இதனைவிட முக்கியமாக கடந்த கால சூழலின் நெருக்கடிகளாலும் எங்கள் அரும்பெரும் செல்வங்கள் அழிந்து போயுள்ளன.

அதனால் எமது சமூகத்தின் இருப்பு கேள்விக்குள்ளாகி இருக்கிறது. எஞ்சியவற்றை காத்தலும் அவற்றினை நவீன தொழில் நுட்பத்தின் துணையுடன் நிலைபெறச் செய்தலும் பதிவாக்குதலும் இன்றைய பயிலரங்கின் நோக்கம். அதுவே காலத்தின் தேவையும் என்றார்.

இந்தப் பணியிலே பல்கலைக்கழக நூலகத்துடன் யாழ்.பொதுநூலகமும் மற்றும் சுவடிக்காப்பில் ஈடுபாடு கொண்ட பண்பாட்டு ஆர்வலர்களும் இணைந்து செயற்பட வேண்டும் என்று குறிப்பிட்ட துணைவேந்தர் பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த காலத்தின் தேவைமிக்க இந்தப் பயிலரங்கை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையினர் நடத்துவதையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய செம்மொழி ஆராய்ச்சி மத்திய நிறுவனத்தின் பிரதிநிதி கலாநிதி அரங்கராஜன் கலந்துகொண்டு ஓலைச்சுவடிகளை பேணும் பயிற்சியை வழங்கினார். அரும்பொருள் எடுத்தாளுனர் ஜெ.ஜெகதீஸ் மற்றும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, வரலாற்றுத்துறைப் பேராசிரியர் செ.கிருஷ்ணராசா முதலியோரும் உரை நிகழ்த்தினார்கள். இந்த நிகழ்வை நுண்கலைத்துறை விரிவுரையாளர் பா. அகிலன் நெறியாள்கை செய்திருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இருபது-20 மற்றும் 5 ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் சம்பியனான அணிகள்

(கரவெட்டி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினால் வடமராட்சி விளையாட்டுக் கழங்களுக்கிடையில் நடத்தப்பட்டு வந்த கிரிக்கெட் போட்டிகளில் அணிக்கு இருபது-20 மற்றும் 5 ஓவர் கொண்ட போட்டிகளில் கரவெட்டி ஞானம்ஸ் குரும்பசிட்டி உதயசூரியன் அணிகள் சம்பியனாகின.

இப்போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்றன.

இதில் முதலாவது போட்டியாக 5 ஓவர் கொண்ட போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து விளையாடிய குரும்பசிட்டி உதயசூரியன் அணி வெற்றிபெற்று சம்பியனாகியது.

இருபது-20 போட்டியில் மாலுசந்தி மைக்கல் அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணிமோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி 19.2 பந்துகளில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றனர் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 19.3 பந்துகளில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 113 ஓட்டங்களை பெற்றனர். இறுதியில் ஞானம்ஸ் அணி 6 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியானாகியது. (ஸ்ரீ-24)

# இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கேட்டு நடைப்பயணம்

(கொழும்பு)

இலங்கை அரசு மீது ஐ.நா.சபை போர்க் குற்ற விசாரணை நடத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தக்கோரி, இலங்கைத் தமிழர்கள் 3 பேர் 20 நாட்களாக நடைப் பயணம் மேற்கொண்டுள்ளனர். ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையகம் உள்ள பெல்ஜியம் நகரத்தை நேற்று இக் குழுவினர் சென்றடைந்தனர்.

மழையையும் வெயிலையும் பொருட்படுத்தாது வந்தடைந்த இக் குழுவினருடன், ஏராளமான தமிழர்களும் உடன் சென்றனர்.

ஐரோப்பிய ஒன்றிய தலைமையக அதிகாரியிடம் இவர்கள் தங்கள் கோரிக்கை மனுவை கையளிக்கவுள்ளனர்.

கடந்த மாதம் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த மனிதநேய நடைப்பயணம் இன்னும் 115 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது நடைப்பயணம் மேற்கொண்டுள்ள ஜெகன் (வயது -62) அவுஸ்திரேலியா,தேவகி குமார் (வயது -36) சுவிற்சர்லாந்து, வினோத் (வயது -48) பிரான்ஸ், ஆகிய மூன்று பேரின் கால்கள் வீங்கிய நிலையிலும் முழங்காலுக்கு கீழே உணர்வு குன்றிய நிலையிலும் இவர் கள் மிகவும் மனவுறுதியோடு தமது நடைப் பயணத்தைத் தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வலுவிழந்தோருக்கு விசேட அடையாள அட்டைகள்

(சாவகச்சேரி)

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு தொண்டர்களால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 252 வலுவிழந்தோர் தென்மராட்சி பிரதேசத்தில் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-7-29)

# விளையாட்டு நிலைய திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திக்கும் கூட்டுறவுக்குமான சுவிஸ் முகவர் நிறுவனத்தின் நிதி உதவியுடன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டு நிலைய திறப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-4)


# நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யா/வேலணை மத்திய கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இம்மாத வேதனத்துடன் "கஷ்டப் பிரதேசப்படி" வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக பெருமுயற்சி எடுத்து வடமாகாண ஆளுநரின் நேரடிக் கவனத்திற்குக் கொண்டுவந்து அனுமதியைப் பெற்றுக் கொடுத்த பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையினருக்கும் பங்கு கொண்ட ஏனையோருக்கும் கல்லூரிச் சமூகத்தின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் புதிய காரியாலயத் திறப்பு விழாவும் தபால் அலுவலகத்துக்கு காகிதாதிகளை கையளிக்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் எம்.ஜெ.எவ். 306B1 இன் ஆளுநர் லயன் எஸ்.ஜெயவக்சலன், பாரியார் லயன் சீமாட்டி சயந்தினி மற்றும் பிராந்திய தலைவர்கள், கழக உறுப்பினர்கள் ஆகியோர் புதிய அலுவலகத்திற்கு முன் நிற்பதையும் தபால் அலுவலகத்திற்கான காகிதாதிகளை 2 ஆவது ஆளுநர் லயன் எஸ்.எஸ். தங்கராசா, எம்.ஜெ.எவ். கழகத்தலைவர் எஸ்.தேவகுமார் ஆகியோர் இணைந்து தபால் உத்தியோகத்தர் க.கஜேந்திரனிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

காலம் உண்மையைக் கண்டுபிடித்து உலகிற்கு வெளிப்படுத்திவிடும்.

- லத்தீன் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வன்னியில் நடந்த பேரவலம் சந்திர மண்டலத்தில் நிகழ்ந்த சங்கதியா?

வன்னியில் நடந்த யுத்தம் தொடர்பான விசாரணை இடம்பெற்று வருகின்றது. படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஜனாதிபதி ஆணைக்குழு இந்த விசாரணைகளை செய்து வருகின்றது.

விசாரணைக்குழுவின் நியமனம், விசாரணை, சாட்சியம் என்பவற்றை எல்லாம் பார்க்கும் போது வேற்றுக்கிரகத்திலிருந்து வந்தவர்கள் வன்னியில் யுத்தம் நடத்திவிட்டு போனது போன்றதொரு பிரமை ஏற்படுகின்றது- ஏற்படுத்தப்படுகின்றது. அந்த அளவிற்கு விசாரணைக் குழுவின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

வன்னி யுத்தத்தின் போது பொசுபரஸ் குண்டுகள் வீசப்பட்டன. கொத்துக்குண்டுகள் போடப்பட்டன என்பதெல்லாம் வன்னிமக்கள் நேரில் அனுபவித்த நிஜங்கள்.

இந்த நிஜங்கள் தெரியாமல் இருக்கின்ற போதுதான் உள்ளக விசாரணைகள் தேவையாக இருக்கும். ஆனால் பொசுபரஸ் குண்டுகளை வீசியவர்களும் கொத்துக்குண்டுகளைப் போட்டவர்களும் இந்த நாட்டில்தான் இருக்கின்றனர்.

இதைச் செய்விப்பதற்கு படைத்தளபதிகள், பாதுகாப்பு அமைச்சு, அவை யாவற்றிற்கும் உத்தரவிடும் அதிகாரம் கொண்டவர்கள் என்ற மிகப்பெரியதொரு கட்டமைப்பு இருந்து அனைத்தையும் நடத்தி முடித்தது.

நிலைமை இதுவாக இருக்கும் போது அதற்கு ஒரு விசாரணைக்குழு அமைத்து அந்த விசாரணைக்குழு சாட்சியங்களைப் பதிவுசெய்து, அதனை அறிக்கைப்படுத்தி அரசின் உயர்மட்டத்திடம் கையளிக்க,

ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கையை அரச உயர்மட்டம் வாசித்து குற்றம் இழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கும் என எதிர்பார்ப்பது நடக்கக் கூடிய காரியமா என்ன?

செய்தவர்களும் அனுபவித்தவர்களும் இங்கேயே இருக்கின்றனர். துயரத்தை- பேரவலத்தை அனுபவித்தவர்கள் தங்கள் சோகத்தைச் சொல்ல அவை அறிக்கை வடிவில் செய்தவர்களுக்கே போய்ச் சேரும் பரிதாபம் உலகில் எங்கும் நடந்ததாக வரலாறில்லை.

யுத்தம் நடத்தியவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் என்ற இருவகுதியினரினதும் நியாயத்துவத்தை விசாரிப்பதாக இருந்தால், அதனை மூன்றாம் தரப்பே செய்யமுடியும்.

பரவாயில்லை. கொத்துக் குண்டுகளுக்கு குடும்பமாய் உயிரைக் கொடுத்த கொடுமையை கண்ணால் கண்டு அந்தச் சடலங்களின் சிதைவுகளைக் கடந்துபோய் முட்கம்பி வேலிக்குள் இருந்த நமக்கு விசாரணைகள் அந்த அவலத்தை மீண்டும் ஒருகணம் ஞாபகப்படுத்தட்டும்.

எதுவாயினும் வன்னி யுத்தத்தில் நடந்த அவலங்கள் எதுவும் சந்திரமண்டலத்தில் நடந்த சங்கதிகள் அல்ல. அவை சனல்-4 உள்ளிட்ட ஊடகங்களில் வெளிவந்த பகிரங்கங்களே.

சிலவேளை வன்னி யுத்தத்தில் ஏற்பட்ட அழிவுகளை ஐ.நா.சபைச் செயலாளர் கோபி அனான் உலங்கு வானூர்தியில் சென்று பார்த்தமையால், வன்னி யுத்தத்தை சந்திரமண்டலத்து சங்கதிகளாக சிருஷ்டிக்க உரியவர்கள் நினைத்தார்களோ என்னவோ தெரியவில்லை.

# வல்லரசுகளுக்கிடையிலான போட்டியே கரடியனாறு குண்டு வெடிப்புச் சம்பவம்

## சந்திரசேகரன் சந்தேகம்

(மட்டக்களப்பு)

இலங்கையில் இரண்டு வல்லரசு நாடுகளுக்கிடையில் நடைபெறும் போட்டியின் வெளிப்பாடே மட்டக்களப்ப கரடியனாறு பொலிஸ் நிலைய வளாகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமாகுமென மக்கள் சந்தேகிப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் தவிசாளருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மட்டக்களப்பு கோப் இன் விடுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே சந்திரசேகரன் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

மக்கள் சந்தேகிப்பது போல் இச்சம்பவம் அவ்வாறு இடம் பெற்றிருக்குமானால் கடந்த 30 வருடங்களில் இடம்பெற்ற பாரிய யுத்தத்தை விட மிகவும் அச்சம் நிறைந்ததாக இது இருக்கும்.

இதனால் இப்பகுதியில் அச்சநிலை காணப்படுவதை உணர முடிகின்றது.

இன்று நமது நாடு மிக மோசமான அராஜகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. சர்வாதிகாரப் போக்கை அரசாங்கம் கடைப்பிடிப்பதால் மக்கள் படுபாதகமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என மேலும் தெரிவித்தார். (ச-5)

# அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் 9 பேர் ஆர்ப்பாட்டம்

## தற்கொலை செய்யப் போவதாக அச்சுறுத்தல்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் 7 பேர் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வில்லவூட் தடுப்பு முகாமின் கூரையில் ஏறிநின்று நேற்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுடன் ஆப்கானியர் ஒருவரும் இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். நாடு கடத்தும் தீர்மானத்தை ஆஸி அரசு மாற்றிக்கொள்ளாவிட்டால் உயிரை மாய்த்துக் கொள்வார்கள் என்று இவர்கள் மிரட்டுகிறார்கள்.

பீஜி நாட்டவர் ஒருவர் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட நிலையில் இக் கூரையிலிருந்து நேற்றுக் காலையில் தற்கொலை செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் நாடுகடத்தப்படுகின்றமையை ஆட்சேபித்தே இவர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். நாடு கடத்தும் தீர்மானத்தை அவுஸ்திரேலிய அரசு வாபஸ் பெறாவிட்டால் கீழே குதித்து தற்கொலை செய்வார்கள் என்றும் மிரட்டியுள்ளனர்.

பிஜி நாட்டவர் ஒருவர் அதிகாலையில் கூரையிலிருந்து குதித்து தற்கொலை செய்துள்ளார். இவ் ஆர்ப்பாட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டிருப்போரில் ஒன்பது பேர் வரையானோர் இலங்கைத் தமிழர்கள் என்றும் ஒருவர் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இரவிலும் போராட்டம் தொடரும் என்று இவர்கள் அறிவித்துள்ளார்கள். இவர்களை கீழே இறக்குகின்றமைக்கு பொலிஸாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களுடன் பேச்சு நடத்த இலங்கையர் ஒருவர் ஆஸி அதிகாரிகளால் கூரைக்கு தூது அனுப்பப்பட்டுள்ளார். ஆர்ப்பாட்டக்காரர்கள் கூரையை விட்டு இறங்கி வந்த பின் பிரச்சினை யை பேசித் தீர்க்கலாம் என்பது அதிகாரிகளின் நிலைப்பாடாக உள்ளது. (எ-5)

# பழிவாங்கும் செயலை நியாயப்படுத்த இராணுவ நீதிமன்றங்கள் ஸ்தாபிப்பு

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

ஆட்சியாளர்களின் பழிவாங்கும் நோக்கத்தை நியாயப்படுத்துவதற்காகவும் அதற்கு சட்டத்தின் பாதுகாப்பை பெறுவதற்காகவுமே இராணுவ நீதிமன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டதாகவும் இராணுவச் சட்டத்தின்படி சரத் பொன்சேகாவுக்கு எதிராக இராணுவ நீதிமன்றத்தை ஸ்தாபிக்கும் அதிகாரம் இல்லை எனவும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தில் தண்டனை பெற்றவர்களே இராணுவ நீதிமன்றங்களில் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு சரத் பொன்சேகா மீது தனிப்பட்ட கோபங்கள் இருக்கக் கூடும். இதனை சரத் பொன்சேகா சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் சாட்சியங்களுடன் சுட்டிக்காட்டினர். அத்துடன் இராணுவ நீதிமன்றம் நியாயமானது அல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும் அரசாங்கம் இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு பொன்சேகாவுக்கு எதிராக தண்டனை விதிப்பதற்காகவே இராணுவ நீதிமன்ற விசாரணைகளை முன்னெடுத்துச் சென்றது. இதனால் இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்புகளை நிராகரிக்க வேண்டும். அத்துடன் இதற்கு எதிராக பாரியளவில் மக்களின் நிலைப்பாட்டை உருவாக்க வேண்டும்.

தற்போதைய ஆட்சியாளர்கள் தமக்கு எதிரான அரசியல் எதிரிகளை தனிப்பட்ட ரீதியில் சந்திக்க முடியாமல் அவர்களுக்கு எதிராக சட்டத்தை பயன்படுத்தி ஒடுக்க நினைக்கின்றனர். இந்த சட்டங்கள் எதிர்காலத்தில் எவருக்கு எதிராகவும் பயன்படுத்தபடக் கூடும்.

அது எதிரான கொள்கைகளை கொண்டுள்ள அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்களாகக் கூட இருக்கலாம் அல்லது ஊடகவியலாளர்களாகவோ, கலைஞர்களாகவோ இருக்கக் கூடும் எனவும் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (எ-5)

# இலவச சட்ட உதவி நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மீளக்குடியமர்ந்தோர்களில் தமது காணி உறுதிகளை தொலைத்தவர்களிற்கு அவற்றை பெற்றுக் கொடுப்பதற்கான இலவசச் சட்டஉதவி நடமாடும் சேவை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு புங்குடுதீவு சமுர்த்தி வங்கியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண சட்ட உதவித் திட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நடமாடும் சேவையில் உறுதிகளைத் தொலைத்தோரிற்கு அவர்களது உறுதிகள், உறுதிகளின் சுருக்கப்பிரதிகள் என்பன இலவசமாகப் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதுடன் இடம்பெயர்ந்தோரிற்கு இலவசமாக பராமரிப்பு, காணி வழக்குகளும் செய்து கொடுக்கப்படுமென யாழ்ப்பாண சட்ட உதவித் திட்ட இயக்குனர் ஜனாதிபதி சட்டத்தரனி செல்லி சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவித்துள்ளார். (ச-5)

# சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



மனதில் ஆசை குறையக் குறைய நாம் மிகவும் நன்றாக செயல்புரிகிறோம்.

நமது ஆன்மாவின் பெருமையில் நம்பிக்கை இன்மையே நாத்திகம் என்று வேதாந்தம் கூறுகிறது. சந்தேகமின்றிப் பலருக்கு இது பயங்கரக் கருத்துத் தான். இது அடைய முடியாத குறிக்கோள் என்று நம்மில் பலரும் நினைக்கலாம். ஆனால் இதை ஒவ்வொரு மனிதாலும் அடைய முடியும் என்று வேதாந்தம் வலியுறுத்துகிறது.

உங்கள் இறைத் தன்மை தான் இறைவன் இருப்பதற்கே அத்தாட்சி. நீங்கள் தீர்க்கதரிசி இல்லை என்றால் கடவுளும் உண்மை அல்ல. நீங்கள் கடவுள் அல்ல என்றால் வேறு எந்த கடவுளும் இருந்ததும் இல்லை. இருக்கப் போவதும் இல்லை. இதுவே பின்பற்ற வேண்டிய இலட்சியம் என்று வேதாந்தம் கூறுகிறது.

# 'காலத்திற்கு ஏற்ற உற்பத்திகள்' கைவினைத்திறன் கண்காட்சி

## நவம்பர் மாதம் யாழில் நடைபெறும்

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு மற்றும் தேசிய வடிவமைப்பு நிலையத்தின் அனுசரணையுடன் காலத்திற்கு ஏற்ற உற்பத்திகள்- 2010 என்னும் தலைப்பிலான செயலமர்வு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா உரையாற்றுகையில்,

காலத்திற்கு ஏற்ற உற்பத்திகள் என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் நவம்பர் மாத முதல் வாரத்தில் கைவினைத்திறன் கண்காட்சியை நடத்தவுள்ளோம். இதில் 31 கிராமங்களைச் சேர்ந்த கைவினைத் திறன் கலைஞர்கள் பங்கு பற்றவுள்ளனர்.

இதில் கைவினை கலைஞர்களின் புத்தாக்கங்கள் இடம்பெறவுள்ளது. யாழ். மாவட்டத்தில் நீண்ட காலத்திற்குப் பின் இந்த அரிய சந் தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பை அனைத்துத் தொழிலாளர்களும் தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

மேலும் இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணத்தில் கைவினைத்திறன் உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களை எதிர்வரும் காலங்களில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய நாம் வழி வகைகளை ஏற்படுத்திக்கொடுப்போம்.

அத்துடன் இக் கருத்திட்டத்தின் மூலம் ஆயிரத்து 250 கைவினைத்திறன் கலைஞர்கள் நேரடியாக பயனடைவர் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இச் செயலமர்வில் தேசிய வடிவமைப்பு சபையின் தலைவர் ரி.எஸ்.மார்ஷல் , கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ். மாவட்ட காரியாலய பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகுருநாதன், திட்டமிடல் பணிப்பாளர் மோகனேஸ்வரன் மற்றும் புத்தாக்க கலைஞர்கள் பலர் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-4-6)

## போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய 22 பேர் கைது

(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய 22 பேரை பொலிஸார் கம்பளையில் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களுடன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட போதைப்பொருள் பைக்கற்றுக்களையும் பெற்றுள்ளனர்.

கம்பளை நகரத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள கல்வளை மற்றும் பொலேகும்புர ஆகிய பிரதேசங்களில் நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையின் போது குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்டிப்பிரதேச மோப்பநாய்கள் இந்தத் தேடுதல் வேட்டைக்கு பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இந்த ஆண்டில் மட்டும் 680 பேரை இதுவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

## இலங்கை அகதிகள் விடயத்தில் ஆஸியின் கொள்கைகளை பின்பற்றவுள்ளது கனடா

(கொழும்பு)

அவுஸ்திரேலியா இலங்கை அகதிகள் விடயத்தில் தற்போது கடைப்பிடித்து வரும் கொள்கை காரணமாக அங்கு செல்லும் தமிழ் அகதிகளின் தொகை குறைவடைந்துள்ளது. இந் நிலையில் அதேபோன்ற கொள்கையை கனடாவும் கடைபிடிக்கவுள்ளதாக கனேடிய சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது.

492 இலங்கை அகதிகள் தமது நாட்டுக்கு வந்தமையும் இதற்கு பின்னர் மேலும் பல அகதிகள் வரவிருப்பதாகவும் வெளியான தகவல்களை அடுத்து கனடா கடுமையான போக்கை கடைபிடிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை அகதிகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு கனேடிய குடிவரவுத்துறை அமைச்சர் ஜேசன் கென்னி அவுஸ்திரேலியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

முன்னதாக இலங்கை அகதிகள் தொடர்பில் அவுஸ்திரேலியா அமுல்படுத்தியுள்ள குடியேற்ற சட்டங்களை கனடா பின்பற்ற முயற்சிப்பதாக செய்திகள் வெளியாகி இருந்தன.

இதன் அடிப்படையில் ஜேசன் கென்னியின் விஜயம் அமைந்துள்ளதாக கூறப்படுவதோடு இவர் நேற்றைய தினம் அவுஸ்திரேலிய குடிவரத்துறை அமைச்சர் கிரிஷ்ப் ரௌனை சந்தித்து இலங்கை அகதிகள் தொடர்பில் முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடியதாக அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை இந்த வாரத்தில் கனேடிய நாடாளுமன்றில் பிரதமர் ஹாப்பரினால் அகதிகள் தொடர்பிலான சட்ட மூலம் ஒன்று தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே அகதிகள் தொடர்பிலான இறுக்கப்படுத்தப்பட்ட சட்டமூலம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக கனேடிய அரசாங்க தகவல்கள் தெரிவித்திருந்தன.

கனேடிய எதிர்க்கட்சிகளும் குடிவரவு சட்டத்தை தீவிரப்படுத்த வேண்டும் என அழுத்தம் கொடுத்துவருகின்ற நிலையில் பெரும்பாலும் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவுக்கு வரும் தமிழ் அகதிகளின் அகதி அந்தஸ்து நடைமுறையை அந்த அரசாங்கம் காலதாமப்படுத்துவது காரணமாக அங்கு செல்லும் இலங்கை அகதிகளின் தொகை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## மருதங்கேணி கூட்டுறவு சங்கத்தின் புதிய கிளைகள் திறந்து வைப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு, உடுத்துறை, வத்திராயன், செம்பியன் பற்று தெற்கு ஆகிய பகுதிகளில் மருதங்கேணி கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கிளைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதை அடுத்து இந்த புதிய கிளைகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் மீள்குடியமர்ந்த மக்களுடைய தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை மாமுனை, செம்பியன் பற்று வடக்கு, தாழையடி போன்ற பிரதேசங்களி லும் விரைவில் கூட்டுறவுச் சங்க கிளைகள் திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-7-43)

## மணற்காடு முகாமிலிருந்த மக்களில் ஒரு தொகுதியினர் மீள்குடியமர்வு

மணற்காடு இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள செம்பியன் பற்று , மாமுனை , தாழையடி மற்றும் உடுத்துறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த சனிக்கிழமை அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மீள் குடியமர்த்தப்பட்ட மக்களுக்குரிய பதிவுகள் மற்றும் ஏனைய வசதிகளை மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையினர் மேற்கொண்டு வருகின்றனர்.


இதேவேளை மீள்குடியமர்விற்கு சென்ற மக்களின் உடைமைகளை மருதங்கேணி உதவி அரச பணிமனையினர் உழவியந்திரங்கள் மூலம் ஏற்றி வந்து தாழையடி கிறிஸ்தவ தேவாலயம் மற்றும் செம்பியன் பற்று அ.த.க.பாடசாலை ஆகிய இடங்களில் இறக்கியதுடன் இம் மக்களுக்[illegible] உதவிகளையும் வழங்கியுள்ளனர். (ஸ்ரீ-7-43)











கிளிநொச்சி தர்மபுரம் ஜி.ரி.எம்.எஸ், புளியம் பொக்கணை ஜி.ரி.எம்.எஸ் ஆகிய பாடசாலைகளின் வகுப்பறைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் தர்மபுரம் ஜி.ரி.எம்.எஸ் பாடசாலை மாணவன் ஆகியோர் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவதையும் வடமாகாண ஆளுநர்மேஜர் ஜெனரல் ஜீ. ஏ.சந்திரசிறி, நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பிரமுகர்கள் மாணவர்களுடன் உரையாற்றுவதையும் புளியம் பொக்கணை ஜி.ரி.எம்.எஸ் பாடசாலையில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வகுப்பறையை நாமல் ராஜபக்ஷ மற்றும் மாணவி இணைந்து திறந்து வைப்பதையும் அருகில் ஆளுநர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார் )

# தேசிய கல்வி நிறுவக ஆசிரிய பயிற்சி நெறிக்கு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

பட்டதாரிகள் அல்லாத, பயிற்றப்படாத ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியப் பயிற்சி நெறிக்கு ஆசிரியப் பயிலுநர்களாகச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி தீவகம், யாழ்ப்பாணம், வலிகாமம் வலய ஆசிரிய உதவியாளர்களுக்கும் 26 ஆம் திகதி வடமராட்சி, தென்மராட்சி வலய ஆசிரிய உதவியாளர்களுக்கும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது. நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகள், உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதிகளுடன் குறித்த நேரத்துக்கு சமுகமளிக்குமாறும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்கள் தமக்குரிய அழைப்பிதழ் கடிதத்தை 22, 23 ஆம் திகதி களில் கல்லூரிக்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கல்லூரியின் பீடாதிபதி எஸ். கே.யோகநாதன் கேட்டுள்ளார்.

தேசிய அடையாள அட்டை, கல்விச் செயலாளர்/மாகாணக் கல்விச் செயலாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட நியமனக் கடிதம், கடமை பொறுப்பேற்றல் தொடர்பான log entry யின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதி, உமது பிரதான கற்பித்தல் பாடம் பற்றி உறுதிப்படுத்தப்பட்ட கடிதம், சுயவிபரம். நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் வருமாறு,

திருமதி கணேசலிங்கம் பவானந்தி (அல்லாரை தெற்கு), தம்பிஐயா மஞ்சூரன் (மீசாலை கிழக்கு), செல்வி நவரட்ணம் கலைவாணி (மிதிலை, தாவடி கிழக்கு), செல்வி மரியசுவர்ணா இம்மானுவேல் (நாவற்குழி), செல்வி சுகிர்தா முருகானந்தம் (நாவற்குழி தெற்கு), சந்திரன் குமரதாஸ் (நுணாவில் மேற்கு), திருமதி சிவமலர் மகேஸ்வரன் (சரசாலை வடக்கு),

சிவப்பிரகாசம் ரஜனிகாந் (கூவில், புலோலி தெற்கு), திருமதி சிவசுகுணா சந்திரகாந்தன் (மட்டுவில் தெற்கு), செல்வி கிரிஜா ஞானசேகரம் (கல்வயல்), செல்வி செல்வநாயகி வடிவேலு (கைதடி தெற்கு), செல்வி சத்தியபாமா இராசலிங்கம் (கைதடி தெற்கு),

செல்வி சுவர்ணா கந்தசாமி (நாவற்குழி தெற்கு), செல்வி ஸ்ரீகந்தராசா சுஜிதா (திருநெல்வேலி), கனகசிங்கம் லக்சுமிகாந் (திருநெல்வேலி), உதயச்சந்திரன் டஜினா (கைதடி மேற்கு), செல்லத்துரை நிருபா (கைதடி மேற்கு), சிதம்பரப்பிள்ளை லலீஸ்வரி (நீர்வேலி மேற்கு), அகிலேஸ்வரன் பிரதீபன் (நவக்கிரி), சிவயோகநாதன் சுதர்சினி (நீர்வேலி தெற்கு), துஷ்யந்தி விஜயகுமார்(கொக்குவில்),

தனசிலி மரியநாயகம் (சுண்டுக்குளி), தாமோதரம்பிள்ளை [illegible]னாம்பிகை (சங்கத்தானை), சிவப்பிரகாசம் லோகதர்சினி (நல்லூர்), இரவீந்திரன் சுலோசனா (யாழ்ப்பாணம்), துரைரட்ணம் தெய்வமலர் (இடைக்காடு), சதீஸ்கரன் சுஜிந்தா (தம்பாலை), ரசிதா சுதாகரன் (புத்தூர்), சின்னராஜா பிரதீபா (நல்லூர் வடக்கு), பாமா தர்மராஜா (அரியாலை),

அரியகிருஷ்ணன் பிரஸ்ணன் (அரியாலை), அன்ரனிற்றா ஜெயக்குமாரி தேவநாயகம் (அச்சுவேலி), யூட்டினா சுபாசினி அலோசியஸ்பவுல் (ஆவரங்கால்), சகாயமேரி விசுவாசம் (நவக்கிரி), கோகிலா சக்திவேல் (கோப்பாய்), நடராஜா சிவகாமசுந்தரி (ஓட்டுமடம்), மன்மதராஜா யாழினி (யாழ்ப்பாணம்), லிந்துஜா நிமலகுமார் (வண்ணார்பண்ணை), வதனா சுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்),

செல்வமாணிக்கம் சுபாசினி (அரியாலை), யோகலிங்கம் தர்மினி (இருபாலை கிழக்கு), வாமதேவன் ஜெனிற்றா (நவாலி வடக்கு), தர்சினி செல்வராஜா (ஊரெழு மேற்கு), செல்வலட்சுமி புவனேந்திரராஜா (உரும்பிராய் வடக்கு), சிவராசா சிவரூபன் (உரும்பிராய் தெற்கு), திருஞானசம்பந்தர் ஞானேஸ்வரன் (ஏழாலை கிழக்கு),

[illegible] மகாதேவன் வினோகாந்தன் (உரும்பிராய் தெற்கு), கவிதா சிவஞானசுந்தரம் (நீர்வேலி மேற்கு), செல்வரதி செல்வராஜா (கோப்பாய் மத்தி), நற்குணசிங்கம் பிரவீணா (அச்சுவேலி வடக்கு), குமாரசாமி துவாரகைமலர் (அச்சுவேலி தெற்கு), ஜெனிதா மெனஸ்ஸஸ் (யாழ்ப்பாணம்), ரவீந்திரா தவரூபி (வட்டு.தெற்கு),

கைமாறட்சன் ஆன்றூக்சி (சுண்டுக்குளி), ஜெயதா ஜெராட் பீற்றர்சன் (யாழ்ப்பாணம்), இரட்ணசிங்கம் மகேஸ்வரன் (ஆனைப்பந்தி), ரூமினா றெஜிமோகனதாஸ் (கொழும்புத்துறை), அப்புத்துரை விஜயலட்சுமி (புத்தூர் கிழக்கு), சுகிர்தா சிவயோகன் (புத்தூர் கிழக்கு), மதிவதனி நடனசபை (புத்தூர் மேற்கு),

சசிக்குமார் விஜித்திரா (ஆவரங்கால்), கிரிதரன் உஷாநந்தி (அச்சுவேலி தெற்கு), கந்தையா ஜெயகாந்தா (அச்சுவேலி வடக்கு), தாமோதரம்பிள்ளை சுகந்தன் (தாவடி), அலோசியஸ் தர்சினி (யாழ்ப்பாணம்), துஷ்யந்தி பிரதீபன் (ஆவரங்கால் கிழக்கு), ஏ.ஜெயந்தா (யாழ்ப்பாணம்), பத்மநிதி பரஞ்சோதி (திருநெல்வேலி), பத்மப்பிரியா ரூபன் (ஆனைக்கோட்டை), ஸ்ரீகாந்தா பிரசாந்தி (திருநெல்வேலி),

சின்னப்பு இந்திரராஜா (கோப்பாய் தெற்கு), கந்தசாமி துற்ஜெயந்தன் (திருநெல்வேலி), தனபாலசிங்கம் சகிலன் (கொடிகாமம்), கேமறஜி நமசிவாயம் (அச்செழு), பாலசிங்கம் பிர தீபா (அச்சுவேலி வடக்கு), அருட்சகோதரி மேரி டிலக்ஸி (அச் வேலி), அருட்சகோதரி மேரி டிலக்ஸி (கரவெட்டி), அருட் சகோதரி மேரி அந்தோனிற்றா (கரவெட்டி), சாமில்டா கதரின் றோசா (கரவெட்டி),

தேவகி யோகேந்திரன் (நீர்வேலி), லாவண்யா சிறிசந்திரன் (ஆவரங்கால் மேற்கு), சுலோசனா சீவரட்ணம் (யாழ்ப்பாணம்), யான்சி துரைராஜா (குமரகோட்டம்), சோதிநாதன் கீர்த்தனா (கோண்டாவில் வடக்கு), சரவணமுத்து பரமேசன் (திருநெல்வேலி), நற்குணம் அகிலன் (யாழ்ப்பாணம்), சகுந்தலாஜினி இரவீந்திரதாசன் (யாழ்ப்பாணம்),

அன்ரலின் ரஜிதா மங்களதாஸ் (யாழ்ப்பாணம்), சுனித்திரா சிறிதரமோகன் (யாழ்ப்பாணம்), மார்ரெலன்ஸ் ரெசிரா ரேணுகா (குருநகர்), கோசலை அரியரத்தினம் (யாழ்ப்பாணம்), யமீலா துரைச்சாமி (யாழ்ப்பாணம்), றோசா ஹெறால்ட் (குருநகர்), பிறேமலதா பிரபாகரன் (கொக்குவில்), ஞானகணேசன் ஜெயசுபாஜினி (யாழ்ப்பாணம்),

ராதிகா ராஜேந்திரா (ஆவரங்கால் மேற்கு), பற்றிமா வசந்த மேரி றெபேட் அலெக்ஸ் (யாழ்ப்பாணம்), சிறிபாலச்சந்திரன் தாரணி (நல்லூர்), ஆரோக்கியராசா ஜெயசீலி (நல்லூர்), செல்லக்கண்டு சுகன்ஜா (அச்சுவேலி தெற்கு),மகேந்திரன் கலைமகள்(கொக்குவில்), கங்கா ஜெகதீஸ்வரன் (கொக்குவில் கிழக்கு), சுப்பிரமணியம் கோகுலன் (கொக்குவில்),

தணிகாசலம் கலாவித்தியா (கொக்குவில்), சின்னத்துரை சுதாநிதி (கோப்பாய் தெற்கு), சுகந்தினி கணபதிப்பிள்ளை (ஆவரங்கால்), றோகினி வீரசிங்கம் (இருபாலை), ஹரிலதா பரமநாதன் (அரியாலை), ஜோன்பிள்ளை ஜெராலின் தனுசியா (கோப்பாய்), செல்வரட்ணம் மோகநாதன் (கோப்பாய்),

பத்மவதனி பாலசிங்கம் (கோப்பாய் தெற்கு), அனிதா கருணாகரன் (யாழ்ப்பாணம்), வாசுகி அன்ரன் ராஜசேகரம் (யாழ்ப்பாணம்), மரீனா சியாமினி மகேந்திரராசா (யாழ்ப்பாணம்), சுப்பிரமணியம் ஜெயந்தன் (கோண்டாவில்), மகாதேவன் தவக்குமார் (இணுவில் மேற்கு),

கந்தசாமி ஜெயநீதன் (மானிப்பாய்), இன்னாசிமுத்து அன்ரன் விமலதாஸ் (பண்டத்தரிப்பு), சங்கரப்பிள்ளை யசோதரன் (சுழிபுரம் கிழக்கு), மகேந்திரகுமாரி ஆறுமுகம் (பண்டத்தரிப்பு), குணசீலன் சாள்சன் (நவாலி தெற்கு), கமலேஸ்வரி சண்முகநாதன் (சுழிபுரம் மத்தி.), பாலசுந்தரம் லஜிதா (சுன்னாகம் வடக்கு), கோமதி செல்வநாதன் (மயிலிட்டி வடக்கு), கவிதா சந்திரமோகன் (சுதுமலை தெற்கு), ஜேசுதாசன் ஜெயசித்திரா (உடுவில் தெற்கு),

கந்தையா மயில்வாகனம் (அளவெட்டி வடக்கு), மேரி இமெல்டா அல்மின்ஸ் சுரேன் (யாழ்ப்பாணம்), கஸ்தூரி பாலசுப்பிரமணியம் (சங்கானை), தாட்சாயிணி முத்துராசா (நவாலி தெற்கு), மகேஸ்வரி நடனசிங்காரவேல் (ஆனைக்கோட்டை), றெனோ அன்ரனிசியா இன்னாசிமுத்து (பண்டத்தரிப்பு), இளையதம்பி ரமணன் (சண்டிலிப்பாய் மத்தி.), ஜேம்ஸ் யூட் நிரைஞ்சன் (இளவாலை),

மரியசாந்தனா றீகன் (இளவாலை மேற்கு), ஜேசுதாசன் அனுஸ்டதாஸ் (மாதகல்), கொன்சீலியா செல்வரட்ணம் (மாதகல்), தாரணி இராஜேந்திரம் (ஊரெழு கிழக்கு), பரராசசிங்கம் சிறிசங்கர் (மல்வம், உடுவில்), சத்தியதேவி சிவகுமாரன் (உடுவில் மேற்கு), சிவநந்தினி சிவநாதன் (சங்குவேலி), பற்றீசியா ஞானச்சந்திரன் (இணுவில் மேற்கு),

மேரிகீத்தா அருள்நாதன் (நவாலி தெற்கு), விஜயராணி வரதீஸ்வரன் (நவாலி தெற்கு), டொறின் ஜெயதீபா ஒலிவர் குணராஜ் (நவாலி தெற்கு), நிர்மலா ஞானாநந்தன் (நவாலி தெற்கு), சசிகுமாரி சின்னத்தம்பி (சுழிபுரம் மத்தி.), கார்த்திகேசு சிவரஞ்சன் (ஏழாலை மேற்கு), இராசையா தாட்சாயினி (உடுவில் தென்கிழக்கு),

சிவராசா சிவகாந்தன் (கோண்டாவில் வடக்கு), யசோத்தா ரஜீனந்தா (ஏழாலை மேற்கு), வாசுகி தவச்செல்வம் (பண்டத்தரிப்பு), சிவஜோதி இராஜரட்ணம் (சண்டிலிப்பாய் மேற்கு), இராசா கிருஷ்ணசேகரன் (அளவெட்டி), பொன்னுத்துரை ஜெகநேசன்(மல்லாகம்),தவராணிதிருக்கேதீஸ்வரசெல்வன்(பன்னாலை),

பூபாலசுந்தரம் பிரகாஷ் (குப்பிளான் தெற்கு), நிரூஜா கந்தசாமி (மயிலங்காடு), பிரியா குமாரசாமி (ஏழாலை வடக்கு), சர்வேஸ்வரன் பத்மா (வடலியடைப்பு), சிறிறஞ்சினி சச்சிதானந்தம்பிள்ளை (வட்டு.மேற்கு), சின்னத்துரை கிருஷ்ணசாந்தி (அளவெட்டி கிழக்கு), யோசப் றோசானி (அளவெட்டி கிழக்கு), பிரணவசோபினி ரவிசங்கர் (துர்க்காபுரம்), சாந்தினி சுரேஸ்கரன் (சுன்னாகம் கிழக்கு),

சாரதாதேவி ராதாகிருஷ்ணன் (மல்லாகம்), அனற்பிறிம்றோஸ் சதீஸ்குமார் (குளமாங்காவல்), மனோகரி கேதீஸ்வரநாதன் (கந்தர்மடம்), இயூயீன் மனைட் கற்பகவதனம் (செல்லவளவு), சுதாஜினி சிவசுதர்சன் (சில்லாலை வடக்கு), மரியஸ்ரெலா செபஸ்ரியாம்பிள்ளை (நவாலி தெற்கு), தர்சினி சிவராசா (சங்கானை), ரெயினா பீற்றர் (நவாலி கிழக்கு), கௌசலா திருவருள்நாதன் (வட்டு.வடக்கு),

பிரியதர்ஷினி சிவசுப்பிரமணியம் (ஆலடி, உடுவில்), கௌசலா சிவலிங்கம் (சங்கரத்தை), லதாஜினி அமிர்தலிங்கம் (சண்டிலிப்பாய் மேற்கு), யசோதரா சுப்பிரமணியம் (மாதகல் வடக்கு), மரியநாயகம் கிறிஸ்ரியன் அனுசாந் (நவாலி தெற்கு), மஞ்சுளா நடராசா (சண்டிலிப்பாய் வடக்கு), அஜந்தா அப்புத்துரை (வட்டு. வடக்கு),

றோகிணி கேதீஸ்வரன் (வட்டு.தெற்கு), சாந்தி விநாயகமூர்த்தி (வட்டு.வடக்கு), கனகலிங்கம் நந்தகுமார் (மூத்ததம்பி வீதி), கோமளேஸ்வரி விநாயகமூர்த்தி (மாதகல் வடக்கு), ரவுரி மார்க்கண்டு (சுட்டுவன் மேற்கு), வாசுகி மகிந்திரராசா (மல்லாகம்), ஜோசெவ் கதரின் மரியகொறற்றி (நவாலி தெற்கு), வேணுகா அருணகிரிநாதன் (கொக்குவில் கிழக்கு), சுகிர்தா பரமானந்தம் (கொக்குவில் மேற்கு),

சங்கீதா கருணாநந்தசிவம்(ஆனைக்கோட்டை), சுபாஜினி சுந்தரேஸ்வரன் (தம்மனை), சிவகுமார் திருமாவளவன் (சண்டிலிப்பாய் தெற்கு), அனுசியா பத்மநாதன் (சுன்னாகம்), புனிதநாயகி கோபாலகிருஷ்ணன் (அளவெட்டி தெற்கு), செந்தில்நாதன் சபேசன் (கொல்லோலை), நந்தினி இடாரூடன் (அளவெட்டி தெற்கு), தேமொழி குகத்தாஸ் (நெல்லோடை), சுகந்தினி கமலதாஸ் (அளவெட்டி மத்தி.), சிறிதேவி யோகராசா (பன்னாலை), சுகந்தினி யோகராசா (சுன்னாகம் வடக்கு), அற்புதம் வினோராஜ் (சண்டிலிப்பாய்), தாட்சாயினி வேலுப்பிள்ளை (சங்கானை), கலைமதி ஈஸ்வரானந்தம் (அராலி மத்தி.), பரிமளா சிவசுப்பிரமணியம் (அராலி தெற்கு).

(தொடரும்)



ஹற்றன் நஷனல் வங்கியின் சங்கானை வாடிக்கையாளர் கிளை திறப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதம செயற்பாட்டு முகாமையாளர் ஏ.ஜே.அலெஸ் முதலாவது வைப்புச் செய்த வைப்பாளருக்கு அன்பளிப்புப் பொருள் வழங்குவதையும் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# "சமாதானம் உதயமாகிறது" அமைச்சர் றிசாட் ஜெனிவாவில் உரை

(ஜெனிவா)

இலங்கையில் கடந்த மூன்று தசாப்த காலமாக மறுக்கப்பட்டுவந்த சமாதானம் இப்போது மீண்டும் புது வேகத்துடன் உதயமாகின்றது. இப் போது நாம் புனரமைப்பு மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை நோக்கி வேகமாக நகர்ந்து வருகின்றோம்.

நீண்டகால சமூகப் பொருளாதார இலக்குகளுக்கு முன்னுரிமை அளித்தே நாம் எமது அபிவிருத்தித் திட்டங்களை வடிவமைத்து வருகின்றோம் என்று கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிசாட் பதியுதீன் கூறினார்.

ஜெனீவாவில் நேற்று ஆரம்பமான உலகப் புலமைச் சொத்து சங்கத்தின் 48-வது உயர் மட்டத்தொடர் கூட்டத்தில் பங்கேற்று உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கை பல தசாப்த காலமாக இன்னல்களுக்கு மத்தியிலும் கடந்த 5 வருடங்களாக சராசரியாக 5 வீதம் பொருளாதார வளர்ச்சியைப் பேணி வருகின்றது. 2010 இன் இரண்டாம் காலாண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 8.5 சதவீதமாக பதிவாகியுள்ளது 2002 ஆம் ஆண்டுக்குப்பின் அதி உயர் பொருளாதார வளர்ச்சியாக இது பதிவாகியுள்ளது.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவையும் மீறி இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தேசத்தைக்கட்டியெழுப்பும் எமது துரித செயற்பாடுகள், ஆசியாவில் இலங்கையை ஒரு அறிவுமையமாக கட்டியெழுப்புதல் என்பவற்றை பொறுத்தமட்டில் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட தேசிய ரீதியாக பலப்படுத்தப்பட்ட ஆக்கபூர்வமான ஒரு சூழல் ஒழுங்கு முறையை கட்டியெழுப்ப வேண்டியது எமது தேவையாக உள்ளது என்றார். (ச)

# காணிப் பிரச்சினையில் தாய் ஒருவர் கொலை

(புத்தளம்)

காணிப்பிரச்சினை ஒன்றில் எழுந்த வாக்குவாதத்தில் புத்தளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொட்டுக்கச்சி கல்குளம் பிரதேசத் தைச் சேர்ந்த இளம் தாய் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி அனுருத்திகா மெனிக்கா எனும் 29 வயது, 3 பிள்ளைகளின் தாயே கொலை செய்யப்பட்டவராவார்.

இக்கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவரின் தந்தை மற்றும் தாய் ஆகியோர் புத்தளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் கொலைக்குப் பயன்படுத்தியதாகச் சொல்லப்படும் கூரிய ஆயுதமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இப் பெண்ணின் கணவர் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளை விட்டுவிட்டுச் சென்றுவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இதன் பின் தனது வீட்டில் பிள்ளைகளுடன் இப்பெண் வாழ்ந்து வந்துள்ள நிலையில் வீட்டைவிட்டு பிள்ளைகளுடன் சென்றுவிடுமாறு அடிக்கடி இப்பெண்ணின் கணவருடையதாயும், தந்தையும் இப்பெண்ணை அச்சுறுத்து வந்ததாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

புத்தளம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# உலகின் மிக நீளமான கூந்தலை உடைய ஆணாக இலங்கைத் தமிழர் சாதனை!

(ரொறன்ரோ)

உலகின் மிக நீளமான கூந்தலை உடைய ஆண் என்று கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார் கனடாவில் வாழும் இலங்கையரான சுதேஸ் முத்து (வயது 40) இவரது கூந்தலின் நீளம் ஆறு அடி மூன்று அங்குலம்.

ஆயினும் சுதேஸ் மசிந்து கொடுக்கவேயில்லை. மீண்டும் கனடாவுக்கு வந்த இவர் கடினமான உழைப்பினால் முன்னேறி பிளாஸ்டிக் பொருட்களை மீள் சுழற்சி முறையில் பயன்படுத்தும் கம்பனி ஒன்றின் உரிமையாளராக உள்ளார்.



இவரின் உயரமோ 5 அடி 9 அங்குலம். சர்வதேசப் பிரசித்தி வாய்ந்த பாடகர் பொப் மார்லேயின் இசைப்பிரியரான சுதேஸ் மார்லேயின் கூந்தலால் கவரப்பட்டார்.

17 ஆவது வயதிலிருந்து இக்கூந்தலை வளர்த்து வருகின்றார். இவர் 1995 ஆம் ஆண்டு கனடாவில் குடியேறினார். 1999 ஆம் ஆண்டு இவர் இலங்கைக்கு திரும்பிச் சென்று திருமணம் செய்து கொண்டார்.

அப்போது கூட கூந்தல் வெட்டுகின்றமைக்கு மறுத்துவிட்டார். இவரின் தாய் உட்பட சொந்தக்காரர் பலர் கூந்தலை சுதேஸ் வெட்டினால் தான் திருமணத்திற்கு வருவார்கள் என்று பிடிவாதம் பிடித்தனர்.

மனைவி மற்றும் 3 ஆண் குழந்தைகளுடன் தொர்கில் நகரில் வசிக்கிறார். சுதேசின் தாயார் கின்னஸ் சாதனையை அறிந்தவுடக் தொலைபேசியல் சொன்ன வசனம் இப்போதாவது கூந்தலை வெட்டிவிடு என்பது தான்.

மனைவியுடன் படுக்கையில் தூங்கும் போது இக் கூந்தல் பாரிய பிரச்சினையாகத்தான் இருக்கின்றது என்று ஒப்புக்கொள்கிறார் சுதேஸ். உலகின் மிக நீளமான கூந்தலை உடையவர் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த ஆசா மான்டேலா என்கிற பெண் ஆவார் (வயது 48) இவரது கூந்தலின் நீளம் எட்டடி ஒன்பது அங்குலம். (ச-5)

# விசாரணைக்கென...

முள்ளிவாய்க்கால் போன்ற இடங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள முல்லைத்தீவு செயலக மண்டபத்தில் நடைபெற்ற இந்த விசாரணைகளின் போது பெரும் எண்ணிக் கையிலான பெண்கள் தமது சாட்சியங்களை பதிவு செய்வதற்காக வந்திருந்தனர்.

இதில் சாட்சியமளித்த கள்ளப்பாட்டைச் சேர்ந்த இரட்ணசிங்கம் ஈஸ்வரி என்பவர் 2009ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி படகுமூலம் யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த போது அதில் பயணம்செய்த தனது தங்கையின் கணவர் இவ்வாறு கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டதாகவும் அதன்பின் அவர் குறித்த தகவல் எதுவும் தெரியாதென கூறினார்.

சுமார் 20 பேர் சிறிய படகு ஒன்றில் பயணித்த போதே கடற்படையினர் தம்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அதன்போது தமது படகிலிருந்த 8 பேர் உயிரிழந்ததாகவும் அதில் தனது தங்கையும் ஒருவர் எனவும் அவர் தனது சாட்சியத்தின் போது கூறினார்.

இறுதியுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டோ அல்லது அழைத்துச் செல்லப்பட்டோ தடுப்பு முகாம்களில் இன்னமும் விடுதலை செய்யப்படாமல் இருப்பவர்கள், காணாமல் போயுள்ளவர்கள் தொடர்பாகவே அதிகமானோர் சாட்சியமளித்தனர்.

அத்துடன் மீள்குடியேற்றப் பணிகளில் அடிப்படை வசதிகள் என்னும் நிறைவேற்றப் படாமல் மற்றும் இன்னும் மீள்குடியேற்றப் படவேண்டியவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் நேற்றைய விசாரணையின் போது அப்பகுதி கிராம சேவையாளர் ஒருவரால் சாட்சியமளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி நகரம், கண்டாவளை, பூநகரி ஆகிய இடங்களில் கடந்த இரண்டுநாட்களாக விசாரணைகள் மேற்கொண்டிருந்த ஆணைக்குழு முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருநாள் மட்டுமே விசாரணைகள் மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-3,5)

# ஊடகங்கள் அஞ்சுகின்...

சேகாவுக்கு எதிராக விதிக்கப்பட்ட தீர்ப்பு சட்டத்திற்கும் நாடாளுமன்ற சிறப்புரிமைகளுக்கும் புறம்பானது. தற்போதைய இராணுவத்தளபதியினால், முன்னாள் இராணுவத்தளபதி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை.

கொலையாளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் இந்த நாட்டில் சரத் பொன்சேகாவின் நிலைமை கவலைக்குரியது. பயங்கரவாதத்தை இல்லாது ஒழித்த படைத்தளபதி ஒருவருக்கு அரசாங்கம் நன்றி பாராட்டும் விதம் கவலையளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# புலிகளின் முக்கிய...

அமைச்சின் உத்தரவின் பேரில் இதுவரை காலமும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் நேற்று குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் இந்நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்டார். இவரை ஆதரித்து சட்டத்தரணி ஒருவர் முதன் முறையாக ஆஜராகி வாதாடினார்.

மனித உரிமைகள் சட்டத்தரணிகளில் ஒருவரான பூ.பூபாலசிங்கம் என்பவரே இவரின் சார்பில் ஆஜரானவராவார்.

தமிழினியை பிணையில் செல்ல இந் நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும் என்று கோரினார்.

ஆனால் இவ்விடயத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவேண்டி உள்ளது என்றும் அவரின் ஆலோசனை யைப்பெற்று அடுத்த தவணையின் போது அறிவிப்பாளர்கள் என்றும் குற்றப்புல னாய்வுப் பிரிவுப் பொலிஸார் மன்றுக்கு தெரிவித்தனர்.

வழக்கை செவிமடுத்த கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலி தமிழினியை எதிர் வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (ச-5)

# அனைவரையும் சாட்...

தனது சாட்சிகளைக் அவ் ஆணைக்கு பதிவு செய்து கொண்டது. இதில் சாட்சியமளிக்கவென காணாமல் போனோரின் உறவுகள் சுமார் 350 பேர் வரை அங்கு வந்திருந்தனர்.

இவர்களில் சுமார் 15 பேரின் சாட்சிகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டதாகவும் ஏனையவர்கள் சாட்சியமளிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என குற்றம் சாட்டப்பட்டது.

இதேவேளை சாட்சியமளிக்கத் தவறியவர்களின் விபரங்கள் மற்றும் எவ்வாறு காணாமல் போனார்கள் என்பன தொடர்பாக படிவம் ஒன்றில் பூரணப்படுத்தி பெற்றுக் கொண்ட ஆணைக் குழுவினர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர். (எ-1)

# 'மக்கள் பட்ட அவல...

விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இறுதி போர் நடைபெற்ற பகுதிகளுக்கு நேற்றுப்பிற்பகல் 2.30 மணிக்கு விஜயம் செய்தது.

இதில் முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம், வட்டுவாகல், புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன், நந்திக்கடல் ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொண்டது.

இவ் விஜயத்தின்போது அவதானிக்கப்பட்டவை தொடர்பில் ஆணைக்குழுவின் உறுப்பினர் தகவல் தருகையில்,

நாங்கள் விஜயம் செய்த பகுதிகளில் புதுக்குடியிருப்பு தவிர்ந்த ஏனைய இடங்களில் மக்கள் இல்லை. போரின் எச்சங்களை அப் பகுதிகளில் அவதானிக்க முடிந்தது.

போரினால் உடைவடைந்த வீடுகள், அழிவடைந்த நிலையிலுள்ள சிறு கட்டிடங்கள், பயன்பாட்டுக்கு உதவாத வகையில் எரிந்தும், அழிந்தும் உள்ள நிலையில் கைவிடப்பட்ட பெருமளவிலான வாகனங்கள் என்பவற்றை அவதானிக்க முடிந்தது.

எனினும் எந்தவொரு இடத்திலும் மனித எச்சத்துக்கான அறிகுறிகளை காணவில்லை ஆனால் இவ் விஜயத்தில் அவதானிக்க முடிந்த ஒன்றைக் குறிப்பிடலாம், இறுதிப் போரில் மிகக் குறுகிய பிரதேசத்துக்குள் இலட்சக்கணக்கான மக்கள் அடைக்கப்பட்டு கிடந்த அவலத்தை சென்ற பிரதேசங்களில் காண முடிந்தது என்றார். (எ-5)

Diploma Courses...
Ms Office
Multimedia
Accounting
Web Development
90% Schol.
Closing Date 21.09.2010
Rs.800 Upwards
கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் Free
SMS your name & course to 772 395 895 & Get Schol.
MCS
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction
Web site : Http://www.mcsitcampus.org
Dip. in English
ICDL
DTP

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.